www.tamilrangam.net

Kaya

— OPAL —

# தேடல்


# THEDAL

1

## நம்மை விழுங்க வரும் முதலையிடம் விழிப்பாக இருப்போம்.

[illegible]க 1989

92600 ASNIERES SUR - SEINE ; FRANCE




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

- OPAL

# எமது தேடல்

உலகின் கலை, இலக்கியத்தின் தாயகம், புரட்சியின் பிறப்பிடம் என்றெல்லாம் பல்வேறு சிறப்புக்களின் அடைமொழிகளைக்கொண்டு அழைக்கப்படும் இந்தப்பிரான்ஸ் நாட்டின் தலைநகரிலும், தலைநகருக்கு வெளியிலுமாக ஏறத்தாழஇருபதினாயிரம் பேர் வரையில் ஈழத்தமிழர்களாகிய நாம் அகதிகள் என்ற அடைமொழியுடன் வாழ்கிறோம்.

வர்க்க முரண்பாடுள்ள எமது சமுதாயத்தின் முழுப் பரிமாணத்தையும், இங்கும் எம்மவர்களிடத்தில் தரிசிக்கக்கூடியதாயிருப்பினும் எம்மனைவரையும் ஒன்றிணைத்த பார்வைக்குள்ளாக்குவது ஒரே தேசம், ஒரே மொழி என்ற அம்சங்கள்தான்.

முந்திப்பிறந்தவர்கள், ஆண்ட பரம்பரைகள் என்று வெறும் வெற்றுக் கோசங்களுடன் கழிந்துவிட்ட எமது கடந்த காலம், நிகழ்காலத்தில் அதன் எதிர் விளைவுகளை அழியாத சுவடுகளாக எம் நெஞ்சங்களில் பதித்துவிட்டு எம்மைப்பார்த்து பரிகசித்து நிற்கின்றது.

இன்னும், இங்கும் நடப்பவைகளைப் பார்த்தால்..... எதிர்காலம் பற்றிய எமது நம்பிக்கையின்மீதே சந்தேகம் எழுகிறது. வரலாற்றைப்பின்னோக்கித்தள்ளும் அதீத பிரயத்தனங்கள் இங்கே சிலரது நித்திய கடமைகளாகி விட்டன.

அவரவர்களது வர்க்க நிலைப்பாட்டிற்கேற்ப வர்க்க நலன் பேணும் தன்மை அவர்களிடத்தில் முனைப்பாக, வெளிப்படையாக வெளித்தெரியும் எனினும், இவர்கள் காலத்திற்கேற்ப, சூழ்நிலைகளுக்கேற்ப வசதியான முகமூடிகளை அணிந்து கொண்டும் மக்கள் முன்

www.tamilrangam.net

வந்து விடுகின்றார்கள் என்பதுதான் மிகப்பெரிய ஆபத்தான விடயம். தமது குண நலன்களுக்கேற்ப பணம், இலாபம் என்ற கனவுகளுடனும், குறிக்கோளுடனுமேயுள்ள இத்தகைய "எரிகின்ற வீட்டில் — விறகு பொறுக்கும்" சக்திகள் இங்குள்ள எம்மவர்களை கலை, இலக்கியம் என்ற போர்வையில் படு பிற்போக்குத்தனமான கருத்துக்களையும், சினிமா மசாலாக்களையும் கொடுத்து தமது இலாப நோக்கத்திற்கு தீனி போட்டுக்கொள்கின்றார்கள்.

இதில், ஒரு சந்ததிக்குத்தாம் வரலாற்றுத் துரோகம் இழைக்கின்றோமே என்ற வருத்தம் ஒரு துளிகூட இவர்களிடத்தில் இருப்பதில்லை.

இவர்களிடத்தில் இதனை எதிர் பார்க்க முடியாதது தான். எனினும் இதுபற்றிய உண்மைகளைக்கூட மக்கள் அறிந்துகொள்ள முடியாத படி அதற்குக்கூட "தூய கலை, இலக்கியம்" என்ற போர்வையைவேறு போர்த்தி விடுகின்றார்கள் என்பதை எண்ணும்போது தான் உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்தும், கலை, இலக்கியம் வாழ் நிலை பற்றிய சரியான பிரக்ஞையை மக்களிடம் ஏற்படுத்தும் ஒரு வரலாற்றுத் தேவை, தார்மீக அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற உண்மை எமக்கு உறைக்கிறது.

இதன் விளைவுதான்; அனேக சிரமங்களின் மத்தியிலும் உதிரிகளாயிருந்த பலரின் ஒன்றிணைப்புடன் ஏற்படுத்தப்பட்ட "மக்கள் கலை, இலக்கியஅமைப்பு" ஆகும். கலை, இலக்கியம், கலாச்சாரம், வாழ்நிலை போன்ற சகலவிதமான வாழ்க்கையின் ஒன்றிணைப்புக்களையும் பற்றிய சரியான, தெளிவான கருத்தியல்களை மக்களிடம் கொண்டு செல்வதற்கு நாம் பல ஊடகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அதில் முக்கியமானதும் முதன்மையானதுமாக உங்கள்முன் அறிமுகம் செய்து வைக்கப்படுவதுதான் "தேடல்" எனும் இம் மாதாந்த சஞ்சிகை.

பரந்துபட்ட ஒரு மக்கள் தொடர்பை பெற விளையும் ஊடகமாக இது அமையும் பட்சத்தில் பரஸ்பரம் ஒரு புரிந்துணர்வுக்கும், இது வழிவகுக்கும் என்ற நம்பிக்கைஎமக்குண்டு. ஏனெனில் நடந்து முடிந்து போனவைகளும், நடந்து கொண்டிருப்பவைகளும் மக்களுக்கு கற்றுத்தந்திருக்கின்ற பாடம் அப்படி. எதிலும் ஒரு சந்தேகப் பார்வையையே செலுத்த வேண்டியுள்ளதை நாம் அறிவோம். எனவே நாம் அனைத்து விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்கும் தயார் நிலையிலேயே உங்கள் முன் பிரசன்னமாகின்றோம்.

மக்கள் நலன் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளிலும் விமர்சனம், சுய விமர்சனம் என்பவை சக்தி மிகுந்த ஆயுதங்கள். இவற்றைத் துறக்கும் பட்சத்தில்தான் அராஜகத்தைத் துணைக்கழைக்கவேண்டியிருக்கும். அத்தகையவர்கள்தான் தேசப்புரட்சிக்கு, சமூக மாற்றத்திற்கு எப்போதும் தடைக்கற்களாக இருந்து கொண்டு தமது வர்க்க நலன்களுக்கு ஏற்ப "கலை கலைக்காகவே" என்னும் நிலபுரபுத்துவக்கால வறட்டுக் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்தபடி உண்மைக்குப் புறம்பாக இருப்பார்கள்.

தமது மனவிகாரங்களைக்காட்டும் கேலிகளையும், சின்டல்களையும் நாடகமென்ற பெயரில் கொண்டு சென்று மக்களின் இரசனையை மழுங்கடிக்க முயலுகின்றார்கள். சினிமாப் பாடல்களை மெல்லிசை, தேனிசை என்று பல பெயர்களில் கொண்டு சென்று அதன்மூலம் அந்த சினிமாப் பாடலின் மூலப் பாடகனையும், சினிமாக் கதாநாயகனையும் காட்சிகளையுமே —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

திரும்பத்திரும்ப மக்களுக்கு ஞாபகமூட்டி கலையென்றால் - யதார்த்தத்திற்குப் புறம்பான தமிழ் சினிமாதான் என்ற கருத்தை விதைக்கின்றார்கள்.

எமது கலைகளை வளர்க்கின்றோம், நம் நாட்டு கலைஞர்களை ஊக்குவிக்கின்றோம் என்கின்ற அறிவிப்புவேறு, ஆனால் சுத்தமான சங்கீதக்கலப்பில்லாத மேலைத்தேய, கீழைத்தேய - கூட்டுச்சாம்பாராகிப்போன தமிழகத்துச் சினிமாப்பாடல்கள் தான் இவர்களது பார்வையில் எமது கலைகள். தமிழகத்துச் சினிமா நடிககர், நடிகைகள், பாடகர்களை இறக்குமதி செய்து - காட்சிப்பொருளாக்கி காசு சேர்ப்பதுதான் இவர்களது கருத்தில் எமது நாட்டுக்கலைஞர்களை ஊக்குவித்தல். இலாபத்திற்காக என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்கிறார்கள். இதைவிடக் கேவலம் என்னவென்றால் இப்படித்தாம் செய்பவைகளையெல்லாம் வேறுநியாயப்படுத்தித் தர்க்கித்தும் வருகிறார்கள் என்பதுதான்.

இவர்களிடத்தில் உயர்ந்த கலை, இலக்கியம்பற்றி யாராவது பிரஸ்தாபித்தால் உடனே இவர்கள் மக்கள் குறித்தும் கலை, இலக்கியம் குறித்தும் தாம் வைத்திருக்கும் மிகக் - கொச்சையான விளக்கங்களையே அளிப்பார்கள். அதில் மிக முக்கியமானது" உன்னதமான கலாபூர்வமான படைப்புக்களை பாமர மக்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள்"என்று படு முட்டாள் தனமாக இவர்கள் கூறுவதுதான். தமது பாமரத்தனத்தைமூடி மறைக்கும் "பகட்டுப்புலமை"யின் அகம்பாவம்தான்இது.

மக்களிடம் இருந்தும், அனுபவங்களில் இருந்தும் பிடிவாதமாகக் கற்றுக்கொள்ள மறுக்கும் இவர்கள் மக்களைப் பாமரர்களாகவும், தம்மை ஆசான்களாகவும் நினைத்துவிடுகின்றார்கள் எனவேதான் மக்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று கலையென்ற பெயரில் தமது மூன்றாந்தர மசாலாக்களைக்காட்டி -

www.tamilrangam.net

"நைந்துபோன குரலில்" கூச்சலிடுகின்றார்கள். இவர்களுக்கெல்லாம் மக்களின் உன்னதம் பற்றி, அவர்களின் அழகியல், கலையம்சங்களைப் பற்றியெல்லாம் என்னதெரியும்? அவர்களின் மேலான உழைப்பை பற்றி அந்த உழைப்பில் இருந்து தோன்றிய தாலாட்டு, ஒப்பாரி, கூத்து, நடனம், தெம்மாங்கு, நாட்டுப்பாடல்கள் போன்ற உன்னதமான கலை வடிவங்கள் எல்லாம் இவர்களது குருட்டுக்கண்களுக்குப் புலப்படுவதேயில்லை. கலை இலக்கியத்தின் அனைத்துக்கூறுகளிலும் ஓர் உன்னத பரிமாணத்தைத் தொட்ட மண்ணில் இருந்து கொண்டே இவை பற்றியதோர் சரியான பிரக்ஞை இன்றி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதே.

'சுதந்திரம்,' சமத்துவம், சகோதரத்துவம், போன்ற உன்னதமான இலட்சியத்தின் பிரகடனங்களோடு இந்த மண்ணிலே நடந்து முடிந்த புரட்சியின் இருநூறு ஆண்டுகள் பூர்த்தியாகி நிற்கும் இவ்வேளை இம்மண்ணில் இருந்துகொண்டு நாமும் சபதமேற் போம். –

தேசப்புரட்சிக்கும், சமூகமாற்றத்திற்கும் தடைக்கற்களாக இருக்கும் போலிகளை அம்பலப்படுத்தி, எமது கலை, இலக்கியம், கலாச்சாரம் ஆகியவற்றின் தளங்களை வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கான ஒரு சுய தேடலுக்கு எம்மைத் தயார்ப்படுத்துவோம்.

"கலை இலக்கியம் யாவும் மக்களுக்காகவே"

---))))---

www.tamilrangam.net

# நானும் ஒரு பெண்

நான் யார்? இது எனக்குள்ளே ஒரு பெரிய கேள்வி !
சமூகத்தின் பெயரில் நான் வாழ்வதற்குத் தகுதியில்லாதவள், ஏனெனில் வாழ வேண்டிய வயது போய்க்கொண்டிருக்கிறதாம்.

அம்மா, அப்பாவை பொறுத்தவரை நெருப்பை மடியில் கட்டிக்கொண்டு மிகவும் கஸ்டப்படுகிறார்கள்.

என் சகோதரர்களோ நெருப்பை அணைப்பதற்கு வசந்தத்தை விலைதீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் நடுவே நான் ஒரு பெண்.

இந்த சமூகம் எங்கேயெல்லாம் என்னைப் பொம்மையாக்கி நடிக்க வைக்க முயல்கிறதோ அங்கேயெல்லாம் என் பெண்மை விழித்துக் கொண்டு போராடுகிறது.
அந்தப் போராட்டத்தின் வெற்றிக்களிப்பு, நானும் மனிதக்கூற்றில் ஒரு அங்கம் என்பதை நிலை நாட்டுவதில் தானே!
சற்று நாளைக்கு முன்னம், வழமையைப்போல எனக்கு ஒரு மாப்பிளை பேசியிருந்தார்கள்.
ஏதோ படித்தவராம், எங்கேயோ வேலை செய்கிறாராம்.
சாதி, சமயம் எல்லாம் எங்களுடையதுதானும்.
இதில் எனக்கொன்றும் அக்கறையில்லை. அடிக்கடி பேசிஅலுத்துக் கொண்டதால் அம்மாவுக்கும், எனக்குச் சொல்வதில் அக்கறையில்லை. ஆயினும் பேச்சுவாக்கில் எட்டத்தில் எனக்கு இவையெல்லாம் கேட்கத்தான் செய்கிறது.
நல்ல குணமாம், ஊரார் உரைச்சுப்பார்த்து சொன்னதை இவர்கள் என்னில் தேய்க்கிறார்கள்.
இன்று பெண் பார்க்க வருவதாக ஏற்பாடு...
துர்க்கையம்மன் கோயிலடியில் மாப்பிளை வருகுதாம். வீட்டை வந்து பார்த்து–வேண்டாம் என்றால் பெண்ணுக்கு "மார்க்கெட்"

www.tamilrangam.net

விழுந்து விடுமாம். நல்ல ஏற்பாடுதான். கோயிலடியில்என்றால் [redacted] நாடு சனத்துக்கு தெரியாது தானே. பார்த்த மாதிரியும் இருக்கும், கோயிலுக்கு வந்தவிடத்து தற்செயலாக சந்தித்தமாதிரியும் இருக்கும்.

இரண்டு பகுதிகளுமே தங்களையும்-ஏமாற்றி, சமூகத்தையும்-ஏமாற்றிக் கொள்கின்றனவே!

அம்மா காலையிலிருந்து ஒரே அமர்களப்படுகிறாள். ஆயிரம் தடவை எனக்கு கிட்டநின்று முணுமுணுக்கிறாள். "இதுவாதல் சரி-வந்திட வேணும்" எப்படியாவது ஒரு கரையில தள்ளிப்போட்டெனென்றால்...

இவையெல்லாம் கரையென்று எதைத்தான் சொல்கிறார்கள்.

இவற்றையெல்லாம் அனுபவித்த அம்மாவால் ஏன் நினைத்துப்பார்க்க முடிவதில்லையென எனக்குள் எப்பொழுதும் நானே வெதும்பிக் கொள்கின்றேன்.

இதையெல்லாம் அம்மாவிடம் விளக்கப்போய்...

அடிக்கடி விளக்குமாத்தால் அடிவாங்கின மாதிரி "உந்ததத்து-வம் எல்லாத்தையும் நிறுத்து "என எத்தனை தரம் விளாசுப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவின் கவனம் முழுக்க நான் நல்ல அழகாக இருக்க வேண்டுமாம். நல்ல சேலை தெரிவதில் கூட என்னில் காட்டிலும் அம்மாவுக்கு அதிக அக்கறை.

இன்றுவரை தெரியாத எவனோ ஒருவனோடு, நான் இறுதிவரை வாழ வேண்டுமாம்.

-இப்படியொரு வில்லங்கம்-

என் இதயத்தை சிறை வைப்பதுதான் "வாழ்க்கை"யாம், வசந்தமாம்.

கோயிலடியில் போயிறங்கிய போது என்னையும் மீறிய ஓர் உறுத்தல்.

இன்று இது கோவிலல்ல, மனித விற்பனை செய்யும் வியாபார-

www.tamilrangam.net

ஸ்தாபனம்.

துரிக்கையென்பது வீரத்தாயாம்—ஆயினும், இன்று நான் நாயிக் கோணி உணர்ச்சிகளைக்கூட இழந்து அடிமையாய் நிற்கின்றேன். வீரவணக்கத்திற்கும்—என் விற்பனைக்கும் இடையில் எத்தனை வித்தியாசங்கள்.

அவர்கள் வந்து விட்டார்கள்—அது தான் மாப்பிள்ளை. கன்றல் உடலை உரைச்சு வியாபாரம் செய்வதற்காக அம்மா என்னோடு தயாராகின்றாள்.

இப்பொழுது அவன் என்னைப் பார்க்கின்றான் என்பது ஊசிதுளை ப்பது போல் என்னுள் உறுத்துகிறது.

நான் அவனைப் பார்த்து புன்னகைக்க வேண்டுமாம். அம்மா — சொன்னது ஞாபகத்திற்கு வர நான் நிமிர்கின்றேன்.

வயிற்றுப்பசிக்காக தன் உடலை விற்க நிற்கும் ஒரு விபச்சாரிக்கும், வாழ்வுப்பிச்சைக்காக என்னையே விற்க நிற்கும் எனக்கும், எந்த வித்தியாசமும் எனக்கு தெரியவில்லை.

ஏதோ ஒரு புத்தகமொன்றில் வாசித்த ஞாபகம் "ஒரு விபச்சாரி தன்னை சில்லறையாக விற்கின்றாள், குடும்பப்பெண் மொத்தமாக விற்கின்றாள்"

இது உடலைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம், ஆனால் அதற்கும் அப்பால், என் உணர்ச்சி, உழைப்பு எல்லாத்தையுமே அவருக்கு விற்க வேண்டுமா? நான் நானாக வாழ முடியும் என்றால் சரிதான். ஆனால், நான் அவரின் விருப்புக்கு, வெறுப்புக்கு ஏற்பத்தான் வாழவேண்டும் என்ற நியதி வருகிற போது — என்னை நான் அவருக்கு ஏற்ப மாற்ற வேண்டுமென்கிற போது எனக்கும், ஆடு—மாட்டுக்கும் இடையே என்ன வித்தியாசம் இருக்கிறது ? உறவுக்கு என்னைப்பழக்கிவாழ்க்கை நடத்துவதற்கும், உழவுக்கு மாட்டைப்பழக்கி உழுவதற்கும்; இப்படி பல கேள்விகள்—பல பதில்கள்—என்னுள்ளே பெரிய போராட்டமேநடக்கிறது.

அவர்கள் எல்லோரும் என் கலியாணம் குறித்து மிகவும் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நாகரிகமாக விலை பேசிக் கொள்ள என் பெண்மை விழித்துக் கொண்டு- "நீ ஒரு மானுடம், உனக்கு உயிரும், உடலும், உணர்ச்சிகளும் இருக்கின்றது. எல்லோருக்கும் போல், உனக்கும் எல்லாத்திற்கும் மேலான உழைப்பு இருக்கின்றது" என்று அழுத்திச் -சொல்லிக் கொள்கின்றது.

நாம் திரும்பிக் காரில் போகிறபோது அம்மா கேட்கின்ரு, "மாப்பிள்ளையை பிடித்திருக்கா? "என்று.

எனக்கு பிடிக்குமா, பிடிக்காதா என்பது அவனின் உயரத்தையும், அகலத்தையும் கொண்டு கணித்து விடலாம் என்பது அம்மாவின் நினைப்போ... என்னவோ...

சிறிது நேர மௌனத்தின் பின் அடியுள்ளத்தின் குமுறல் மெல்லிய சிரிப்பாக என்னுள் வெடிக்கிறது.

இதை ஏதோ எரிமலை வெடிப்பதாக உணர்கிற அம்மாவும், அப்பாவும் ஏதோ தங்களுக்குள் வெறுப்புடன் புறுபுறுக்கின்ருர்கள். சிறைக் கூடத்திலிருந்து விசாரணைக்காக நீதிமன்றம் வந்து திரு-ம்பிப் போவது போன்ற உணர்ச்சி மனசை நெருட அம்மாவும், அப்பாவும் சிறைக்காவலர்களைப் போல் ஒரு தோற்றம்என்னுள் உறைகின்றது.

நான் எதுவுமே பேசவில்லை. மௌனமாகவே இருக்கின்றேன். ஏனெனில், இந்த சமூக நீதிமன்றத்தால், எனக்கு நீதி வழங்க முடியாது. மேலும், மேலும் உரித்து என்னை நிர்வாணப் படுத்தமட்டு-மே தான் முடியும்.

அம்மா நீண்ட பெருமூச்சோடு மீண்டும் கேட்கின்ருள். "அப்போ நீ எப்படித்தான் கலியாணம் பண்ணப்போகின்ரும்? "

நான் ஒரு அடிமையில்லை, விற்பனைப் பொம்மையில்லை.

அப்படியென்ரு இந்த சமூகத்தின் "மரபு வழக்காம்"

அதை ஒதுக்க முற்பட்டால், இழிவான பட்டங்கள் வழங்கி, சமூகச் சிறையின் தண்டனை உயரும். ஆகையால், நான் நாளுகவிருப்பதில் திருப்தியுற்று தற்போதைக்கு மௌனிக்கின்றேன். நெருப்பைமடியில்

www.tamilrangam.net

கட்டிக் கொண்டிருக்கும் அம்மாவையும் சுமந்து கொண்டு கார் மிகவும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது.

- கலைவாணி -

# காணிக்கை

ஒவ்வோர் அங்குலத்திலும்
மலர்களின் வனப்பிலிருந்து
சுடுகாட்டிற்கு மாறிய
எனது இயற்கையை
தரையைப் பிளந்த
கறுப்புக் கோடுகளை
எரிந்த மணலில் புதைந்த
வெற்றுத் தோட்டாக்களை
தனியே கிடந்த
ஒரு குழந்தையின் எலும்புக்கூட்டை
உயிர்ச் சுவட்டிற்காக
ஓட்டைகள் விழுந்த மண்டை ஓடுகளை
துண்டு துண்டுகளாக
கிழித்துப்போடப்பட்ட சட்டைத்துண்டுகளை
தாவாரத்திலே தூக்கிவிடப்பட்ட
கலப்பை நுகத்தடியை
எரிந்து கருகிப்போன எனது புத்தகங்களை
கிணற்றுக்குள் விழுந்து
முறிந்து போன துலாக்கட்டையை
ஒல்லிவற்றிப்போன செத்தல் தேங்காயை
உருச்சிதைந்துபோன எனது சமூகத்தை
எப்படி எனது சந்ததிக்கு கையளிக்கமுடியும் ?

சுகன்

www.tamilrangam.net

# இந்திய திரைப்படங்களும் அவற்றின் வர்க்கக் குணம்சமும்

இருபதாம் நூற்றுண்டின், மிகப்பரந்துபட்ட மக்களை உலகளாவிய ரீதியில் ஈர்த்துக் கொண்டதும், விஞ்ஞானபூர்வமானதுமான ஒரு கலைவடிவமாகத் திகழும் திரைப்படமானது, வெறுமனே ஒரு - பொழுது போக்குச்சாதனம் என்ற வரையறைக்குள் வைத்துப் பார்க்கப்படும் ஒரு துர்ப்பாக்கிய நிலையினை, எம்மவர் பலரிடத்திலும் இன்று அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இக்கருத்து- நிலையின் தோற்றுவாயாக, இந்தியத் தமிழ்த்திரைப்படங்களின் அதிகபட்ச பரிச்சயமும், மொழி ரீதியான அந்நியோன்னியத்- தன்மையும், ஏனைய மொழித்திரைப்படங்களின் பரிட்சயமில்லாத, மொழிரீதியில் அந்நியப்பட்ட அல்லது பார்வைக்கு அருகிக்காணப்படுவதும், ஆகிய இவைகளே மேலோங்கிக் காணப்படு வதால் தரவேறுபாட்டினைக் கருத்தில் கொள்ள மறுக்கும் இயல்பான அறிவுக் குறைபாடென எம்மவர்மீது முழுப்பொறுப்பையும் சுமத்திவிடல் சாத்தியமில்லை. எனினும், இதுபற்றியதோர் தெளிவு மிக அவசியமானதே.

அஸ்தமித்துப்போன, "கலை கலைக்காகவே" என்னும் பழைய வறட்டுத் தத்துவத்திற்காக அழுதுபுலம்புபவர்கள் இன்னும்இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனல் காலவெள்ளம் என்னவோ, இவற்றையெல்லாம் அடித்துக்கொண்டு சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதுதான் உண்மை. கலை மக்களுக்காக, மக்களால் சிருஸ்டிக்கப்படுபவை என்பதை இன்றும் மனங்கொள்ளத்தவறுபவர்- களாலேயே கலை இலக்கியத்தின் பல கூறுகளும்; இன்று பாழடிக்கப்படுகின்றன. இந்த வகைக்குள் தான் இந்தியத் தமிழ்த்திரைப்படங்களும் அடங்குகின்றன என்பது; இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. (மலையாளம், வங்காளி தவிர்ந்த இந்தியாவின் ஏனைய மொழித் திரைப்படங்களில் பெரும்பாலானவையும் - இவற்றுள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது)

புறத்தோற்றத்தின் பிம்பங்களை உள்வாங்கிப் பிரதிபலித்த -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

புகைப்படக்கலையின் படிமுறை வளர்ச்சியாக தனித்தனி அசையும் நிழற்படங்களாகவும் பின்னர் அவை பேசும் தன்மையைப்பெற்றன வாகவும் ஒரு பரிணும வளர்ச்சியை அடைந்த திரைப்படமானது, மனிதனை ஆச்சரியத்தில் மூழ்கடித்த ஆரம்பக்கட்டத்தில் ஒரு - அற்புதமான கலாவடிவத்தை தன்னுள் அடங்கிய விஞ்ஞானபூர்வ மான சாதனம் என்பதை பெரும்பாலானேர் உணர்ந்து கொள்ளவில்லை. அப்பொழுது அது மனிதனுக்கு ஓர் இன்பஅதிர்ச்சியை யும், ஆச்சரியத்தையும் கொடுத்த ஒன்ருகவே விளங்கியது. ஆனல் பின்னர் ஏற்பட்ட கலை இலக்கிய மேதைகளின் மூலம் சாதித்துக்காட்டியது. இதன் மூலம் மக்கள் தொடர்புக் கலைச்சாதனங்களில் முதன்மையிடம் வகித்த சினிமாவானது யதார்த்தபூர்வமான ஒரு கலைவடிவமாக தன்னை இனங்காட்டியது. ருஸ்ஸிய, செக்கோசிலோவோக்கிய, கங்கேரி, ருமேனியா மற்றும் இந்தியாவின் - கேரளம், வங்காளம், இலங்கை(சிங்கள மொழியில் சில திரைப்படங்கள்) ஆகிய நாட்டுப்படங்களை, இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிடலாம். அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகள் தொழில்நுட்ப ரீதியாக மாபெரும் சாதனைகளை - திரைப்படத்தின் மூலம் நிகழ்த்திக்காட்டின.

கோமொல்லி, நர்போனி என்கிற பிரபலமான பிரான்ஸ்நாட்டுத்திரைப்பட விமர்சகர்களின் கூற்றுப்படி ; சினிமாப்படம்என்ற தயாரிப்பு எந்த பொருளாதார அமைப்பில் தயாரிக்கப்பட்டுக்காட்டப்படுகின்றதோ, அந்த அமைப்பின் சித்தாந்தத்தால் - நிர்ணயிக்கப்படுகின்றது. ஏனெனில் சினிமாப்படம் என்பது ஒரு - பொருளாதார அமைப்பில் தயாரிக்கப்பட்ட பொருள், உழைப்பும், பணமும் செலவழிக்கப்படுவதால் ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்படும் நிறுவனம், நுழைவுச் சீட்டுக்கள் மூலம் - விற்கப்படுவதால் பண்டமாற்று மதிப்புள்ள வியாபாரப்பொருள். வியாபாரப்பொருள் கடைசியாக நிர்ணயிக்கப்படுவது அதன் - வருமானம், விநியோகம், விளம்பரம் முதலியவைகளால். ஆகவே

www.tamilrangam.net

அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்படங்களைப் பொறுத்தவரை, அவற்றை நிர்ணயிக்கும் சித்தாந்தம் முதலாளித்துவமேயாகும். எனவே சினிமாப்படம் இந்த அமைப்பின் சித்தாந்தத்தால் நிர்ணயிக்கப்படுவதால் எப்பொழுதுமே அரசியல் சார்புடையது, என இவர்களெடுத்துக் காட்டுகின்றனர்.

இப்பொழுது, நாம் இவர்களின் கோட்பாட்டினைக் கொண்டு – இந்தியத்திரைப்படங்களை பரிசீலிப்போமாயின், மேற்பார்த்த உண்மை புலப்படுவதினை அவதானிக்கலாம். வியாபாரச்சந்தை-யிலே போட்டிக்கு விடப்படும் ஒரு பண்டமாக திரைப்படம்மாற்றப்பட்டதால், அது முதலாளிகளின் கையிலே எளிதாகச்சிக்கி-விட்டது. எனவே முதலாளித்துவ அரசையும், அதன் நிறுவன அமைப்புக்களையும் காட்டிக்காக்கக்கூடியதான நீதிபோதனைகள், வர்க்க சமரசம், பெண்ணடிமைத்தனம் என்பவற்றையே கருவாகக்கொண்ட திரைப்படங்களாக அவை உருவாகுவதை தவிர்க்க முடியாதுள்ளது. இத்தகைய அம்சங்களை முற்றும்முழுதாக இந்தியத்தமிழ்த் திரைப்படங்களில் காணலாம். திராவிட பாரம்பரியம், பழம்பெருமை, நீதி போதனைகள், பெண்ணடிமைத்தனம், வர்க்க – சமரசம், மதம் இவற்றோடு வர்க்க நலன்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான போதனைகள், அரசியல்–பதவி–இலாபம்கருதியதான "ஹீரோயிசம்" என்பவைகளை உட்கொண்டு வெளிவரும் தமிழ்த் திரைப்படங்களின் தரநிர்ணயம், "சினிமா வெறும்பொழுது போக்குச்சாதனம்" என்னும் கருத்திலிருந்து மாற்றுக்கருத்துக் குசாதாரண பார்வையாளனை இட்டுச் செல்லாது என்பது மறுக்க முடியாத உண்மையே.

எதார்த்த சூழலுக்கு முகம் கொடுக்கும் கலையம்சம் பொருந்திய முற்போக்கான திரைப்படங்களை வங்காளம், மலையாளம் ஆகிய இந்திய மொழிகளில் பெரும்பான்மையாகக் காணலாம். இந்தியத் திரைப்படங்களை உலகத்தரத்திற்கு உயர்த்திய –

www.tamilrangam.net

இயக்குனர்கள் சத்யஜித்ரே, மிருனாள்சென், சியாம்பெனகல், அடூர் கோபாலகிருஸ்ணன் ஆகியோரது வரிசையில் தமிழில் எவரையும் சேர்த்துக்கொள்ள முடியாத ஒரு நிலை மிகவும் வருந்தத்தக்கதே.

தமிழில் சிறந்த இயக்குனர்கள் இருந்தும், ஆரோக்கியமற்றஅரசியல், பொருளாதார சூழ்நிலையும், கட்டிக்காக்கப்படும் நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களும், முதலாளித்துவ பொருளாதார - நிலைப்பாடும், சந்தை விதிகளுக்கமைய ஒட்டுமொத்தமான முதலாளித்துவ சித்தாந்தத்தைப் பிரதிபலிப்பதனால், அதற்குள்கட்டுப்பட்டுப் போகவேண்டிய நிர்ப்பந்தம் திரைப்பட விநியோகஸ்தர்களினாலும், தயாரிப்பாளர்களினாலும்; அத்தகைய இயக்குனர்களின் தலைமேல் சுமத்தப்படுகின்றது. பொருளாதார நலன்களுக்காக அவர்களும், அதற்கு கட்டுப்பட்டு போகின்றனர். ஏனெனில் இவற்றை மீறிய சில இயக்குனர்கள், குறிப்பாக ருத்திரையா- (அவள் அப்படித்தான் என்னும் திரைப்படம் எடுத்தவர்) மகேந்திரன் (முள்ளும் மலரும், உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள்ஆகிய திரைப்படங்களை இயக்கியவர்) ஆகியோரின் வர்த்தக ரீதியிலான வீழ்ச்சி, ஏனைய திரைப்பட இயக்குனர்களை திரைப்பட "போர்மூலா" விலிருந்து விலகிச்செல்ல விடாமல் நிலைநிறுத்தியது. வர்த்தக சினிமாவில் நிலைத்து நிற்கவேண்டிய அவசியமானது, தமிழ் திரைப்பட இயக்குனர்களை சமூக, கலைப்பயன் கருதிய நிலைப்பாட்டிலிருந்து விலகச்செய்தது என்பது ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. எனவே தான், இவர்களால் தொடர்ந்து ம்முதலாளித்துவ சந்தை விதிகளுக்கமைந்த சினிமா மசாலாக்கள் தயாரிக்கப்படுகின்றன.

எதார்த்த பிரச்சனைகளுக்கு கலைவடிவம் கொடுக்கும் தரமான திரைப்படத்தை தமிழில் காணமுடியாததற்கு இவ்வாறு சினிமாவானது முதலாளித்துவக்கரங்களுக்குள் முடங்கிப் போனதும், சமூகப் பிரக்ஞையுள்ள கலாபூர்வமான திசைச்சிருஸ்டிகளுக்காகஆதங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கொள்பவர்களின் பொருளாதார ரீதியிலான காரணங்களுமே-ஆகும். ஏனெனில் மிகக்குறைந்த முதலீட்டைக் கொண்டு தயாரிக்கப்படக் கூடியதான திரைப்படமானது; வர்த்தக ரீதியிலாக - போட்டிச் சந்தையில் நிறுத்தப்பட்டதால், அதிகளவு முதலீட்டில் அது உருவாகத் தொடங்கியது. பெரும்பொருட்செலவுகளில் பெரிய, பெரிய அரங்குகளை நிர்மாணித்து, அதிலே கனவுக்காட்சிகளை அமைத்து யதார்த்த நிலைக்குப்புறம்பான செயற்கைக் காட்சிகளின் மூலம் பார்வையாளர்களுக்கு, உண்மையை மறைத்து ஒரு பொய்யான உலகத்திற்கு, அவர்களை அழைத்துச் சென்று அதன்மூலம் அவர்களது சிந்தனையை, வர்க்க உணர்வை மழுங்கச் செய்து தமது இலாபங்களைப் பெருக்கிக் கொள்ளும் முதலாளிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து சினிமாவை மீட்டெடுப்பதென்பது பெரும் சிரமமெனினும், அவசியமானதும், அவசரமானதும் கூட. ஏனெனில், தமது வர்க்க நலன்களைத் தக்க வைத்துக்கொள்ளும் முதலாளித்துவ சிந்தனைவாதிகளினால், மக்களை சுலபமான வழியில் சென்றடையும் சாதனமாகிய சினிமாவானது பாழடிக்கப்படுவதுடன், சமுதாய யதார்த்த நிலை மறக்கப்பட்டு, நிலப்பிரபுத்துவ எச்சங்களையும், முதலாளித்துவ நலன்களையும் கட்டிக்காப்பதற்கென மக்களை-அவர்களை அறியாமலேயே- அதற்காக பயிற்றுவித்து தயார் செய்யும் அபாயம் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனதும், ஜெயலலிதா அதற்காக இன்று அதீத பிரயத்தனம் எடுத்துக் கொள்வதும், அண்ணாத்துரை, கருணாநிதி போன்றவர்கள்; - உழைக்கும் மக்களினது வர்க்க உணர்வை மழுங்கடித்து இனஉணர்வைத் தூண்டிய தமது பிற்போக்கான அரசியலுக்காக சினிமாவைப்பயன்படுத்தியதும், இன்றும் வேறு உலகெங்கிலும் காணப்படாத வகையில் நடிகர், நடிகையருக்காக ரசிகர் சங்கங்கள்பெருமளவில் அமைக்கப்பட்டதும், நடிகர், நடிகைகளுக்கு பெரிய அளவில் விழா எடுத்து, அவர்களை ஒரு அபரிதமான மிகைமதிப்பீட்டிற்கு


www.tamilrangam.net

உட்படுத்தி தமிழக மக்கள் செய்யும் செயல்களும் இவற்றை நன்ருக நிரூபிக்கின்றன.

எனவே இன்றைய சினிமாவுக்கெதிரான ஒட்டுமொத்தமான எதிர்ப்பை எல்லா வழிகளிலும் தெரிவிப்பதுடன்,உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்வகையில் அதற்கான அனைத்து வழிகளையும் கையாள வேண்டும்.மக்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வு,சமுதாய மாற்றத்திற்கு,வேண்டிய முன்னெடுப்புக்களுக்கு, அவர்களை இட்டுச் செல்லும்.அப்பொழுது கலை,இலக்கியங்களின் சகல வடிவங்களும் புதுமலர்ச்சியும் செழுமையும் அடையும்.சமுதாய அடித்தளமாகிய பொருளாதாரத்தில் மாற்றம் நிகழும் போது சமுதாய மேற்கட்டுமானமாகிய அரசு,சட்டம்,நிறுவனம்,கருத்தியல்கள்,கலை,இலக்கியங்கள் யாவும் மாற்றமுறும் என்பது வரலாற்றுவிதி.

மனிதனின் உழைப்பிலிருந்து தோன்றிய கலையானது;உழைப்பவர்களின் நலன்களுக்கு பங்கம் விளைவிக்கும் பட்சத்தில் ஒட்டுமொத்தமாக,அவை நிராகரிக்கப்பட்டு,உழைப்பவர்களின் புதிய சித்தாந்தத்தினுல் தீட்டப்படும் கலாபூர்வமான சிருஷ்டிகள்,அதே - உழைக்கும் மக்களினுல்,கலைஞர்களினுல், பிரசவிக்கப்படும்என்பது மறுக்கப்பட முடியாத வரலாற்று உண்மை.

அருந்ததி. நன்றி: [illegible]



www.tamilrangam.net

# பூகோளத்தின் மேற்பரப்பில்

பிரான்ஸ்:

<u>பிரான்சின் குடியேற்றச்சட்டங்களில் சீர்திருத்தம்.</u>

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா மித்திரானின் புது வருட அறிவிப்பாக பிரான்சின் குடியேற்றச் சட்டங்களில் சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் விடயம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 1960ம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இருந்து பிரான்சில் வேலைவாய்ப்புகள் காரணமாக குடியேறுபவர்களது எண்ணிக்கை அதிகரிக்கஆரம்பித்தது. 1964க்கும் 1973க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 1.3மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் குடியேறியுள்ளனர். இதன் பின்னர் பிரான்ஸ் குடியேற்றவாளர்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளை விதிக்க ஆரம்பித்தது. தற்போது பிரான்சில் குடியேறியவர்களது எண்ணிக்கைநாலு தொடக்கம் ஐந்து மில்லியன் வரையிலானதாகும். ஒவ்வொரு வருடமும் ஏறத்தாள 50,000வெளிநாட்டவர்கள் பிரெஞ்சுப்பிரைசைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்கள். இதில் பாதிப்பேர் பிரெஞ்சுப்பிரஜைகளை மணம் முடிப்பதனால் அல்லது பிரான்சில் ஐந்து வருடங்களுக்குமேல் வாழ்ந்ததினால் இந்த அந்தஸ்தைப்பெறுகின்றனர். மீதி இங்குள்ள வெளிநாட்டவர்கட்கு இங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு கிடைக்கும் உரிமையாகும்.

ஜனாதிபதி மித்திரானின் அறிவிப்பின்படி சோசலிச அரசின் உடனடித்திட்டமானது 1986ல் பதவியில் இருந்த வலது சாரி அரசாங்கத்தின் உள்நாட்டு அமைச்சராகிய திரு. சாள்ஸ் பஸ்காவின் பெயரில் உருவாக்கப்பட்டகுடியேற்றச்சட்டங்களை இரத்துச்செய்வதாகும். மேற்குறிப்பிட்ட பஸ்காவின் சட்டமூலங்கள்

பிரான்சில் உள்ள வெளிநாட்டவர்கள்மீது இரக்கமற்ற மூர்க்கத்தனமான நடைமுறைகளை கட்டவிழ்த்துவிட வழிகோலியது. இச்சட்டத்தின்படி சாதாரண பொலிசார்களே நீதி மன்றங்களிடம் இருந்த உரிமைகளை தமது கைகளில் எடுத்து வெளிநாட்டவர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற ஆரம்பித்தனர். இதற்கு உதாரணமாக பாரிசுக்கு அண்மையில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்த 101 மாலி நாட்டவர்கள் கைகளும் கால்களும் கட்டப்பட்டு தனி விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு மாலிக்குத் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிலாம். பஸ்காவின் சட்டமூலங்கள் பிரான்சில் உள்ள இனவாதிகளை குறிப்பாக இனவாதத் தேசிய முன்னணியின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே கொண்டுவரப்பட்டன. எனவே இச்சட்டமூலங்களை இரத்துச் செய்யும் சோசலிச அரசின் முயற்சியை பல்வேறு சமூக நல மற்றும் இனங்களுக்கிடையே நட்புறவுக்கான அமைப்புகள் வரவேற்றுள்ளன.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வரும் புதிய சட்டமூலத்தின்படி பிரெஞ்சுப்பிரஜை களாவதற்குரிய விதிகள் இலேசாக்கப்படும். இங்கு பிறக்கும் பிள்ளைகள் தன்னிச்சையாக பிரெஞ்சுப்பிரஜையாகும் உரிமைபெறுவர். வெளிநாட்டவர்க்கு எதிரான பொலிஸ் கெடுபிடிகள் குறைக்கப்பட்டு வதிவிடப்பத்திரங்கள் ஒழுங்காக வழங்க வழி கோலப்படும் என நம்பப்படுகின்றது.

லிபியா:

லிபியாவின் இரு விமானங்கள் அமெரிக்காவினால் சுட்டு வீழ்த்தப்பட்டன.

---

லிபியாவுக்கு எதிரான அமெரிக்காவின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடருகின்றன. சமீப நாட்களாக அமெரிக்க ஜனாதிபதி -

www.tamilrangam.net

ரீகன் லிபியாவில் ஒரு இரசாயன ஆயுதத்தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என்றும் எந்தவித ஆதாரங்களையும் சமர்ப்பிக்காது அறிக்கைகள் விட்டு வந்தது தெரிந்ததே. இது குறித்து கருத்துத்தெரிவித்த லிபியா, அமெரிக்கா தன் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கே இத்தகைய பொய்க்காரணங்களை முன்வைக்கின்றது என கூறியுள்ளது. இதைத் தொடர்ந்து கடந்த ஜனவரி 4ந்திகதி மெடிற்றிறேனியன் வளை பிரதேசத்தில் லிபியாவின் இரண்டு-மிக்-23போர்விமானங்களை அமெரிக்காவின் எஃப்-14போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தியுள்ளன. லிபிய விமானங்கள் ஏவுகணைகள் சகிதம் தம்மைத் தாக்க வந்ததாகவும் அதனாலேயே தாம் அவற்றைத் தாக்கியதாகவும் அமெரிக்கத் தரப்புத் தெரிவித்துள்ளது. ஆனால் இதை நிராகரித்துள்ள லிபிய அரசு தனது விமானங்கள் நிராயுத பாணியானவை என்றும் லிபியாவின் மீது ரீகன் நிர்வாகம் நடத்தவிருக்கும் பாரிய ஒரு தாக்குதலுக்கு முன்னோடியாகவே இது நடந்திருக்கிறதென்றும், தனது தாக்குதலை நியாயப்படுத்த அமெரிக்கா பொய்சாட்சியங்களை ஆதாரங்காட்டுகின்றதென்றும் கூறியுள்ளது.

அதேசமயம் அவசரமாக கூட்டப்பெற்ற ஐ.நா. பாதுகாப்புச்சபை கூட்டத்தில் பெரும்பான்மை நாடுகள் அமெரிக்க நடவடிக்கையை வன்மையாகக்கண்டித்துள்ளன. இது குறித்து சோவியத் வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி தாக்குதல் குறித்த அமெரிக்காவின் தகவல்கள் உண்மையற்றவை என்றும் லிபியாவின்மீது அமெரிக்கா கொண்டுள்ள விரோதமே தாக்குதலுக்கான காரணமென்றும், இது ஒரு பயங்கரவாத நடவடிக்கையே என்றும் கூறியுள்ளது. அதே சமயம் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் அங்கம் வகிக்கும் அணிசேராநாடுகளின் குழு

www.tamilrangam.net

அமெரிக்காவின் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ளன. இத்தாக்குதல் எவ்வித ஆத்திரமூட்டலுமில்லாமல் மேற்கொள்ளப் பட்டது என்றும் சிறுபிள்ளைத்தனமானது என்றும் இது அரச - பயங்கரவாதத்தின் ஒரு அம்சமேயென்றும் கூட்டுச்சேராநாடுகளின் அறிக்கை கூறுகின்றது.

இந்தியா:

இந்திரா காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகள் தூக்கில் இடப்பட்டனர்.

முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி. இந்திரா காந்தியைக் கொலை செய்த வழக்கு விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட - கேகார்சிங் (54வயது) சத்வந்சிங் (25வயது) ஆகியோரது சகல மேன்முறையீடுகளும், தமது மரண தண்டனைகளை ரத்துச்செய்யுமாறு கோரிய விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு இவர்களது மரண தண்டனை ஜனவரி ஆருந்திகதி காலை டில்லியில் உள்ள திகார் சிறைச் சாலையில் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தண்டனை நிறைவேற்றப்படும்போது சீக் தீவிரவாதிகளால் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப் படலாம் என்று கருதி இந்திஅரசு பஞ்சாப் உள்ளிட்டு நாட்டின் பல பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தியிருந்தது. இருந்தபோதிலும் டில்லியில் சீக்கிய தீவிரவாதிகள் வீடுகளில் புகுந்து பத்துக்குமேற்பட்டோரைக் கொலை செய்துள்ளனர். அத்துடன் மேற் படி மரணதண்டனைக்கெதிரான தமது பழிவாங்கல்கள் தொடரும் என்றும் கூறியுள்ளனர்.

கனடா:

<u>வெளிநாட்டவர்கள் மீது கனடா புதிய கட்டுப்பாடு.</u>

1989ம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதியில் இருந்து கனடாவில்- குடியேறவிரும்பும் அல்லது அரசியற் புகலிடம் கோர விரும்புபவர் கள் மீது மிகக்கடுமையான கட்டுப்பாடுகளை கனடிய அரசு விதிக்க

www.tamilrangam.net

ஆரம்பித்துள்ளது. புதிய நடவடிக்கைகளின்படி அரசாங்கம் ஏற்கனவே அடைக்கலம் கோரியுள்ள 85,000பேரின் விண்ணப்பங்களை விரைவில் விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. மேற்படி விசாரணைகளில் இவர்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படின் இவர்களுக்கு மேன் முறையீடு செய்யும் அதிகாரம் உண்டு. இவர்களிற் பெரும்பான்மையோர் தமிழர்களும்சீக்கியர்களும் ஆவர்.

அதே சமயம் கனடாவில் புதிதாக நுழைபவர்கள் கனடாவின் எல்லைகளிலும், விமான நிலையங்களிலும் வைத்து விசாரிக்கப்பட்டு தமது நிலைகளை நிருபிக்கத்தவறின் திருப்பி-அனுப்பப்படுவர். குறிப்பாக தமது சொந்த நாடு தவிர்ந்த இதரநாடுகளில் இருந்து, முக்கியமாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து கனடாவுக்குள் நுழைய முற்படுபவர்கள் 72மணித்தியாலங்களுள் திருப்பி அனுப்பப்படுவரென்றும் கனடிய அரசு அறிவித்துள்ளது.

பாலஸ்தீனம்:

இஸ்ரேலின் இரும்புக்கரங்கள் தொடர்ந்தும் பலஸ்தீன மக்கள்மீது.

ஒருவருடத்தைக்கடந்து தொடர்ந்து நடந்துவரும் பாலஸ்தீன-"மக்கள் எழுச்சியை" அடக்குவதற்கு இஸ்ரேல் தனது இரும்புக்கரங்களை தொடர்ந்து பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும். பாலஸ்தீனப்பிரதேசத்தில் கடந்த - டிசம்பர் மாதத்தில் மட்டும் முப்பத்தியொரு பாலத்தீனியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதுடன், 400க்குமேற்பட்டோர் படுகாயப் படுத்தப்பட்டுமுள்ளனர். அதுமாத்திரமல்ல கடந்தவாரம் சியோனிஸ்டுக்கள்15பாலத்தினிய சமுகநல சேவையாளர்களை அவர்களது சொந்த நாட்டில் இருந்தே வெளியேற்றியுள்ளது. கடந்த 1987ம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஆண்டு டிசம்பர் மாதம் பாலஸ்தீனிய மக்கள் எழுச்சி தொடங்கிய நாளில் இருந்து இதுவரை இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிகள் 350 பாலஸ்தீனிய உயிர்களை பலிவாங்கியதுடன் பல்லாயிரக் கணக்கானோரை படுகாயப்படுத்தியுமுள்ளது.

இந்த மக்கள் எழுச்சியை தடுக்க இஸ்ரேல் எத்தனை கடுமையான சட்டங்களை பிரயோகித்து மக்களின்வாழும் உரிமைகளைப்பறித்து, பட்டினிச்சாவை ஏற்படுத்தி வதைத்தாலும் பாலத்தீன மக்கள் தமது போராட்டத்தை கைவிட மாட்டார்கள் என்று-பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சார்பில் வெளியான அறிக்கை தெரிவிக்கின்றது.

* ஜப்பானின் சர்வாதிகாரியான கீரோகித்தோ நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்ததின்பின்னர் தனது 87வது வயதில்-ஜனவரி 7ந்திகதி மரணமடைந்துள்ளார். இவரின் மரணம் ஜப்பானில் பெருந்துன்பமாக அனுஸ்டிக்கப்படுகின்றது.

* சீனாவில் கல்வி பயின்று வந்த ஆபிரிக்க மாணவர்களுக்கும் சீன மாணவர்களுக்கும் இடையில் அடிக்கடி ஏற்பட்டுவந்த மோதல்கள் பெரும் பிரச்சனையாக வளர்ந்துள்ளது. தற்போது ஆபிரிக்க-மாணவர்கள் சீனாவில் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லையென்றும் தாம் நாடு திரும்பவிரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர்.


* இரசாயன ஆயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான உலக நாடுகளின் மகாநாடு பாரீசில் கூடியுள்ளது. 150நாடுகளுக்கு மேல் பங்குபற்றும் இம்மகாநாட்டை பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரோன் தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தார்.

* எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெற இருக்கும் மாநகர-சபைத்தேர்தல்கள் தொடர்பாக பிரான்சின் அனைத்து அரசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யல் கட்சிகளும் மு 'னப்பாக செயற்பட ஆரம்பித்துள்ளன. அதே வேளையில் மேற்படி தேர்தலில் அபேட்சகர்கள் நியமனம் தொடர்பாக கட்சிகளில் பெரும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன. தேர்தலில் சோசலிசக்கட்சி கம்யூனிசக்கட்சிக் கூட்டு ஒரு புறமாகவும், வலதுசாரிக்கட்சிகளின் கூட்டு மறு புறமாயும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

* இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டு ஸ்கொத்லாந்தின்மீது - விபத்துக்குள்ளான அமெரிக்காவுக்குச்சொந்தமான PAN-NAM. விமானத்தில் பிரயாணம்செய்த 259பேரும் நிலத்தில் இருந்த 11பேரும் கொல்லப்பட்டுள்ளனர். மேற்படி விபத்திற்கு விமானத்துள் வைக்கப்பட்ட வெடி குண்டே காரணமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.




ஒருவர்- தம்பி எங்க வலு வேகமாகப்போறார்.

மற்றவர்- எங்கட நாடு பிடிக்கிறதை விட வேறநாடு பிடிக்கிறது லேசாம்.

www.tamilrangam.net

# மு. தளையசிங்கமும் மாக்ஸியமும்

— சி. சிவசேகரம்

## முன்னுரை

காலஞ் சென்ற மு. தளையசிங்கத்தை விமர்சித்து எழுதும் எண்ணம் ஏறத்தாழ மூன்று வருஷங்கள் முன்பு ஏற்பட்டது. ஆயினும் மு. த. வுக்கு உள்ள முக்கியத்துவமே ஒரு குறுகிய வட்டத்துக்குட்பட்டது என்பதால் அந்த எண்ணத்தைச் செயற்படுத்தாமல் விட்டுவிட்டேன். பின்பு அலை - 19 இல் (1981 ஐப்பசி-கார்த்திகை) மு. பொன்னம்பலம், மு. த. பற்றி கைலாசபதி எழுதிய கட்டுரைக்கு மிகவும் ஆக்ரோஷமாகவும் சிறிது நாகரிகக் குறைவாகவும் எழுதிய பதிலை (யாருக்கு இரண்டக நிலை மு. த. விற்கா? கா. கை. க்கா?) வாசித்த போதும் அந்த எண்ணம் மனதில் எழுந்தது. ஆயினும் எழுதவேண்டிய அவசியம் இல்லாமையால் மீண்டும் விட்டுவிட்டேன். அண்மையில் தென்னிந்தியாவில் சில மாக்ஸிய எதிர்ப்பாளர் மத்தியில் மு. த. பற்றிய புதிய அக்கறை எழுந்துள்ளதும் அது அந்த வட்டத்துக்கு வெளியேயும் சிறிது சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதால், மு. த. வின் கருத்துக்கள்பற்றி எழுத முற்படுகிறேன். இதன் நோக்கம் தனியே மு. த. பற்றி விமர்சிப்பது அல்ல. மாக்ஸியத்தைத் தாண்டிப் போவது, மாக்ஸியத்துக்கும் இந்திய சிந்தனை மரபுக்கும் முடிச்சுப் போடுவது போன்ற சில முயற்சிகளில் ஈடுபட்டுள்ள சிலருக்கும் பதில் கூறும் தேவையையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறேன்.

மு. த. பற்றி விமர்சித்த கைலாசபதி தன் விமர்சனத்தில், முக்கியமாகச் சில வாதங்களைக் கையாண்டதில், கவனயீனமாக இருந்திருக்கிறார் என்றாலும், அவரது முக்கியமான முடிபுகள் பற்றி நான் அவருடன் உடன்படுகிறேன். கைலாசபதி மு. த. வின் சிந்தனைகளில் உள்ள மேலும் பல குறைகளையும் குழப்பங்களையும் சுட்டிக்காட்டவில்லை என்பதுவே என் பிரதான முறைப்பாடாக இருக்கிறது. கைலாசபதி மு. த. வைக் கொஞ்சம் மிகையாகவே மதிப்பிட்டு விட்டாரோ என்று கூடத் தோன்றுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மு. த. மாக்ஸியத்தைப் புரிந்துகொள்ளாமல் அதைக் கடந்து செல்வதாகக் கூறி மாக்ஸியத்தை எதிர்த்தவர் என்ற மதிப்பீடு மிகவும் சரியான ஒன்று. மு. த. வின் தத்துவத்துக்கு ஆதாரமாக இருந்த பலவீனங்கள் பல. பொருள்முதல் வாதத்தைப் போதாது என்று கூறிக் கருத்து முதல் வாதத்தை ஏற்பதாகக் கூறத் தயங்கி இரண்டையும் ஒருமைப்படுத்துவதாகக் கூறும் மு. த. வின் சிந்தனைக் குழப்பம் என்னை வியப்படையச் செய்யவில்லை. அதையெல்லாம் தத்துவ முத்துக்களாக்கிப் போற்றும் போக்கும் என்னை அதிசயிக்கவில்லை. மு. த. வின் தத்துவத்துக்கு ஆதாரமாக உள்ள சிந்தனைகளையும் ஊகங்களையும் விமர்சிக்கும் போது எத்தகைய கருத்துத் தெளிவீனங்கள் அவரது சிந்தனைக்கு ஆதாரமாக இருந்தன என்பதைக் காணவும் சிலரால் அவை குருட்டுத்தனமாக விமர்சனமின்றி, ஏற்றுக் கொள்ளப்படும்போது அவை அவர்கட்கு மாபெரும் சிந்தனைப் போக்குகளாகத் தென்படுகின்றன என்பதை உணரவும் உதவக் கூடும்.

## மு. த. வும் மாக்ஸியமும்

மாக்ஸியம் நல்லதுதான் என்கிற விதமாக இடத்துக்கிடம் மு. த. குறிப்பிட்டாலும் அவரது முக்கிய நோக்கு மாக்ஸியத்தின் போதாமையை வலியுறுத்துவதும் அதைத் தாண்டிப் போக வேண்டிய அவசியத்தை விளக்குவதுமே. மு. த. மாக்ஸியம் பற்றியும் அதன் அடிப்படைகள் பற்றியும் கொண்டுள்ள தெளிவீனமான கருத்துக்களை முதலில் எடுத்துக்கொள்கிறேன்.

(1) ''சரித்திரத்துக்கு மார்க்ஸீயவாதிகள் கொடுத்த வளர்ச்சியானது மாக்ஸீயவாதிகளையே தோற்கடித்து வளரும் காலம் வந்துவிட்டது. ஆனால் அதை மாக்ஸீயவாதிகளாலேயே உணர முடியாமல் இருக்கிறது. அதனால் அவர்கள் புதுப்புது வியாக்கியானங்களைத் திரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். தங்களுக்குள்ளேயே பிளவுபட்டுச் சண்டைபோட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இன்னும் தர்மம் அவர்கள் பக்கந்தான் அதிகம் இருக்கிறது. ஆனால் அதன் தொடர் வளர்ச்சிக்கு அவர்களின் தத்துவப் பார்வை விட்டுக்கொடுக்கக் கூடியதாய் இல்லை''. (போர்ப்பறை, ப. 75).

(2) ''எப்படி ரஸ்ஸியா, சீனா, போன்ற நாடுகளில் முதலாளித்துவ அமைப்பு பூரணமாக வளருவதற்கு முன்னமே பொதுவுடமை அமைப்பின் ஆரம்பமும் தொழிலாளர் சர்வாதிகாரமும் ஏற்பட்டுவிட்டனவோ அதே வகையில் இனிமேல் பூரணமான முதலாளித்துவ அமைப்பு அல்லது அதற்குப் பின்னர் வரக்

தொடர்ச்சி 28ம் பக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# படைப்பாளிகளுக்கு!

எமது தேடலில் நீங்களும்
பங்கு கொள்ளுங்கள்

தரமான ஆக்கங்கள்;
விமர்சனங்கள் என்பன
உங்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகின்றன.

தொடர்புகட்கு

K. kanaga singam
39. Rue de la Jonquiere
75017 PARIS



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கூடிய தொழிலாளர் சர்வாதிகாரம் எதுவுமில்லாமலேயே அவற்றுக்கும் அப்பாற்பட்ட ஒரு சகாப்தத்தையும் சமூக அமைப்பையும் தோற்றுவிக்கக் கூடிய சூழல் உருவாகிவிட்டது''. (போ. 90).

(3) ''மாக்ஸின் சிந்தனைகள் இன்று பல நாடுகளில் செயல்படத் தொடங்கிய பிறகுதான் அதன் குறைகளும் நடைமுறையில் நம்பக்கூடிய வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரப் பொதுவுடமை மிக அவசியம் என்பதை உலகம் உணர்கிறது. ஆனல் அதைக் கொண்டுவருவதற்குரிய காரணங்களையும் விளக்கங்களையும் மார்க்ஸ் காட்டிய கோணத்தில் முற்றுக ஏற்றுக்கொள்வதும் சரியல்ல என்பதை மார்க்சிய சித்தாந்தம் நடைமுறையில் அனுட்டிக்கப்பட்ட பின்தான் உலகம் பூரணமாக நம்பத் தொடங்கியிருக்கிறது''. (போ. 93).

(4) ''வர்க்கப்பிரிவினை என்பதே அறியாமைக்கு உட்பட்ட, பழைய அறியாமைக்குட்பட்ட, காலத்தின் மனத் தோற்றமேதான். அதனுல் ஆயுதமேந்திய வர்க்கப்போராட்டம் சரித்திரம் தன்னை உணராத வரைக்கும், உலகாத்மா தன் சுயத்தை அறிவு பூர்வமாகக் கண்டுபிடிக்காத வரைக்கும் நடைபெறும் அறியாமைக்குட்பட்ட போராட்டமாகவே இருக்கிறது. ஏகல் (Hegel) கூறியது போல் தானே எல்லாமாக இருக்கிறது என்பதை உணரும் உலகாத்மா அதற்குப்பின் வர்க்கப் பிரிவினைகளையும் (அதே போல் சாதி, இன, மொழி, தேசப் பிரிவினைகளையும்) பலாத்காரத்தையும் அடிப்படையாகக் கொண்டு போராடாது. ........ ஏகலே தன் முடிவைச் சரியாக வளர்க்காததுபோல் மாக்ஸும் அந்த முடிவைப் பிழையாகவே, தலைகீழாகவே வளர்த்துள்ளார். காந்தி, விஞேபா போன்ருேரே மனிதகுல அன்பையும் அகிம்சையையும் சத்தியத்தையும் அடிப்படையாய்க் கொண்டு சரித்திரத்தை வளர்க்க முயல்வதால் ஏகல் கண்டுபிடித்த இடத்திலிருந்து சரித்திரத்தை உண்மையாக வளர்ப்பவர்கள் அவர்களாகவே இருக்கின்றனர்.'' (போ. 99)

(5) பொருள்முதல்வாதம், கருத்துமுதல்வாதம் என்ற பாகுபாடு இன்று விஞ்ஞான ரீதியாகத் தன்னை நிறுவமுடியாத குருட்டுப் பார்வையாகி விட்டது.' (மெய்யுள் ப. 42)

(6) லோகாயத வாதத்தின் இறுதிக்கோலமாக (அது) (மாக்ஸியம்) இருக்கிறதேயொழிய, மனத்தளத்தின் அடுத்த பார்வைப் போக்கான சமய சித்தாந்தப் பார்வையின் முடிவாகவும் அது இல்லை. (மெ. 36)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

(7) ''மாக்ஸ் விட்ட தவறுகட்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவர் விஞ்ஞானமாகக் கருதியவை பூரண விஞ்ஞானமல்ல. அவர் அறிவுப் பிறழ்வாக ஒதுக்கிய ஞான அனுபூதி நிலையும் — நிர்வாண நிலை — உண்மையான அகவிஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பேயாகும். மேற்கத்தைய விஞ்ஞானம் அதை இனிமேல்தான் பூரணமாக உணர வேண்டியிருக்கிறது.'' (போ. 94).

மேற் குறிப்பிட்ட சில மேற்கோள்களில் மு. த. வின் மாக்ஸிய விரோதம் தெளிவாகியிருக்கும். முதலாளித்துவ முறையை எதிர்ப்பதில் அவர் மாக்ஸியவாதிகளுடன் உடன்பாடு காட்டலாம். அவர் இடையிடையே எவ்வளவுதான் மாகஸியத்தின் நற்பண்புகளைப் போற்றிக் கூறினாலும், அவர் கூறுமாறு மாக்ஸியத்தை தாண்டிப் போவது, இன்றைய சூழலில், மாக்ஸியத்தை நிராகரிப்பது என்பதைவிட வேறெதையுமே குறிக்காது. இதை மூடிக்கட்டச் சிலர் எடுக்கும் முயற்சிகள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

'மாக்ஸிய முகாமுக்குள்' பிளவுகள் (1) பற்றி மு. த. பேசுகிறார். இந்தப் பிளவுகள், கருத்து முரண்பாடுகள் ஆகியனவும் வேறுபட்ட வியாக்கியானங்களும் மாக்ஸின் காலத்திலிருந்தே இருந்து வந்தவைதான். மாக்ஸிய இயக்கம் ஒரு விறைப்பான தத்துவ நிலைப்பாட்டின் மேல் கட்டியெழுப்பப்பட்ட திருச்சபை அல்ல. செயற்பாட்டினூடு வளர்ச்சிபெறும் இயக்கம் ஒன்றில் தவறுகளும், தோல்விகளும் இயல்பானவை மட்டுமல்ல அதன் வளர்ச்சிக்கும் பங்களிப்பவையுங் கூட. கருத்து முரண்பாடுகளின்மூலம் மாக்ஸியம் சிதைந்து போகவில்லை. மாக்ஸியம் மாக்ஸிய - லெனிஸமாகவும், சீனாவில் மாஓ சேதுங் சிந்தனையாக வளரவும் தொடர்ந்து விருத்தியடையவும் மாக்ஸிய இயக்கத்திலுள்ளான பிளவுகள் கூடத் தம் பங்கைச் செலுத்தியுள்ளன.

ரஷ்யாவிலும் சீனாவிலும் முதலாளித்துவம் வளருமுன்னமே புரட்சி ஏற்பட்டதை ஆதாரமாக வைத்து சோசலிஸ சமுதாயம் ஏற்பட முன்னரே அதற்கு ''அப்பாற்பட்ட'' ஆத்மீக அடிப்படையிலான சமுதாயம் ஏற்படும் சூழ்நிலை உருவாகிவிட்டது (2) என்று வாதிக்கும் மு. த. முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக வளர்ந்ததனாலேயே அதன் முரண்பாடுகள் விருத்திபெற்ற முதலாளித்துவத்தின் தேசிய எல்லைகட்கப்பால் விஸ்தரிக்கப்பட்ட சூழ்நிலை பற்றியும் அதனாலேயே சர்வதேசரீதியாக ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சி வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளின் எல்லைக்கு வெளியே நடத்தப்படும் சூழல் உருவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வது என்று அறியமாட்டாரா? அந்தப் புரட்சிகள் ஏன் சாத்தியம் என்பதை முன் கூட்டியே மாக்ஸியவாதிகளால் ஆதாரபூர்வமாக விளக்கமுடிந்தது. மு. த. என்ன ஆதாரங்களைத் தன்னுடைய 'புதுயுகத்தின் வருகைக்கு' ஆதரவாகக் காட்டுகிறார்? இரண்டு விஷயங்களை ஒப்பிட்டு முடிபுகட்கு வருமிடத்திலோ, ஒன்றை வைத்து மற்றவற்றை விளக்குமிடத்திலோ, சில தர்க்க ரீதியான அடிப்படைகளை அவதானிக்க வேண்டாமா? மு. த. இந்த விஷயத்தில் தவறிவிட்டார்.

பொருளாதாரப் பொதுவுடமைக்கான அவசியத்தை உலகம் உணரும் அதே சமயம் புரட்சிக்கான மாக்ஸிய காரணத்தையும் விளக்கத்தையும் ஏற்காததாலா (3) புரட்சி ஏற்படவில்லை? முழு உலகமும் இவ்வளவு எளிதாக இந்த விஷயத்தில் தெளிவு காணக்கூடுமாயின் ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதில் நமக்கு இவ்வளவு சிரமம் ஏனென்று புரியவில்லை. 'சரியான' காரணத்தையும் விளக்கத்தையும் தரவல்ல மஹான்கள் எத்தனையோபேர்தான் மாக்ஸுக்குப் பிறகு வந்துபோய்விட்டார்களே!

வர்க்கப் பிரிவினை விஷத்தில் (4) அறியாமை என்ற ஒரு வார்த்தையால் முழுப்பிரச்சனையையும் மூடிவிட்ட மு. த. வின் தெளிவீனமான வரலாற்றுக் கண்ணோட்டம் வர்ண அமைப்புப் பற்றிப் பேசும் இடத்தில் அப்பட்டமாகவே தெரிகிறது. (அதற்குப் பின்னர் வருகிறேன்.) ஆனால், வர்ண பேதத்துக்கு ஆழமான தத்துவ விளக்கம் காணமுற்பட்ட மு. த. வுக்கு வர்க்க பேதத்துக்கும் ஏதாவது அகப்படாமல் போய்விட்டதா?

பொருள்முதல் வாதம் கருத்துமுதல்வாதம் என்ற வேறுபாடு விஞ்ஞானரீதியாகத் தன்னை நிறுவமுடியாத குருட்டுப் பார்வையாகி விட்டது (5) என்று வாதிக்கும் மு. த. வின் விஞ்ஞான ரீதியான விளக்கத்தைக் கேட்டால் அசந்தே போய்விடுவீர்கள். சடமானது சடத்தின் உருவத்தைக் கடந்த சக்தி ஒளி அலையாகவும் அவற்றிற்கு அப்பாற்பட்டதாகவும் மாறுகிறது. (மெ. ப. 42 அப்பாற்பட்டது என்ன என்று மு. த. விளக்கவில்லை.) எனவே சடம் என்பது நிலையான ஓர் அடித்தளமல்ல; எனவே பொருளை முதலாகக் கொள்ள முடியாது. இதற்கு ஆதாரமாக ஆதர் சி. கிளாக் என்கிற விஞ்ஞானப் புனைகதையாளரையும் மேற்கோள் காட்டி அதிலும் தன்னுடைய அர்த்தம் எதையோ திணித்துள்ள மு. த. வுக்கு பொருள் முதல்வாதம் என்றால் சடப்பொருளை மாற்றமுடியாத முதன்மைப் பொருளாகக் கொண்ட ஒன்று என்ற வரட்டு வியாக்கியானம் தானா அகப்பட்டது? ஏதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வது வார்த்தைக்கு அகப்பட்ட அகராதியில் அர்த்தம் பார்த்து விட்டு அதையே வரைவிலக்கணமாக்கும் குருட்டுத்தனம் கருத்து முதல்வாதம் என்கிற விஷயத்திலும் தென்படுகிறது. (அதற்கும் பின்னர் வருவோம்.)

லோகாயத வாதத்தின் இறுதிக் கோலமாக மாக்ஸியம் இருக்கிறது (6) என வாதிக்கும் மு. த. லோகாயதம் என்கிற பழைய பொருள் முதல் வாதம் இயங்கியல் சாராதது என்பதால் அது மாறுநிலையியல் (Metaphysical) தன்மையுடையது என்பதை அறிய மாட்டாதவரா? சமய சிந்தாந்தப் பார்வை என்று மு.த. குறிப்பிடும் Metaphysical (மாறுநிலையியல்) மார்க்ஸியத்தில் இயங்கியல் பார்வைக்கு முரண்பாடானதாகவே இருக்கிறது. பொருள் முதல்வாதம் கருத்துமுதல் வாதம் இரண்டையும் இணைப்பதும் அதன் மூலம் முழுமையான கோலம் ஒன்றைப் பெறுவதும் என்றெல்லாம் வாதித்துவிட்டு மனத்தளத்திலிருந்து பேரறிவுத்தளத்துக்குத் தாவுவது பற்றிப் பேசும் மு. த. இந்த இணைப்புக்கான அடிப்படைபற்றித் தெளிவாக எதையுமே முன்வைக்கவில்லை. அந்த இரு தத்துவப்போக்குகளதும் அழிவை அவர் விரும்புகிறார் என்றாலும் அவரது இறுதிநிலை கருத்து முதல்வாதமே. இதை அவரால் உணர முடியவில்லை

மாக்ஸியம் விஞ்ஞானமாகக் கருதுவது பூரண விஞ்ஞானம் அல்ல என்று வாதிக்கும் மு. த. (7), தான் கூறும் 'பூரண விஞ்ஞானம்' என்றைக்காவது மாக்ஸியத்தின் இலக்காக இருந்ததா என்று கவனித்தாரா? மாக்ஸியம் தன் 'பூரணமற்ற' தன்மையையும் தான் சார்ந்து நிற்கும் விஞ்ஞானத்தின் பூரணமற்ற தன்மையையும் நன்கு உணர்ந்தே உள்ளது. பூரண உண்மை பற்றிய பாசாங்கு மாக்ஸியத்துக்கு உரிய ஒன்றல்ல. விளங்காத விஷயம் பற்றி மாக்ஸியவாதியின் பதில் ''இப்போதைக்கு என்னால் விளக்கமுடியாது'' என்பதே. எல்லாவற்றையுமே விளக்கும் நிர்ப்பந்தம் சமயவாதிகட்குத்தான் இருந்துவந்துள்ளது. எனவே தான் மோட்ச நரகங்களும் பாப புண்ணியங்களும் ஜன்மவினையும் பிறவிச்சுழலும் அவர்களை மூழ்கடித்து விடுகின்றன.

மாக்ஸியம் பற்றிய அறிவில் எவ்வளவு தெளிவுடன் மு. த. மாக்ஸியத்தைக் கடந்து செல்ல முற்பட்டார் என்பதற்கு மேலும் மேலும் மேற்கோள்களைக் காட்ட வேண்டிய அவசியம் எனக்கில்லை. இனி மு. த. வின் வரலாற்று அறிவுக்கு வருவோம்.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# எங்கள் பெருமைகள்

— அருந்ததி

முந்திப் பிறந்த
மூத்த பழங்குடிகள்,

எங்கள் பண்பாட்டினை
பழமையினை
பேணிப் பாதுகாப்போம்,

இலைதழை உடுத்தி
அம்பும் வில்லும் தரித்து
எங்கள் நாகரீகத்தை
எங்கும் பறையறைவோம்,

பற்களை இழித்து
மரத்திற்கு மரம் தாவி
குதித்துக் கும்மாளம் போட்டு
பரிணாமம் அடையாத
எங்கள் மகத்துவம் பற்றி
எட்டுத்திக்கும்
எடுத்துச் சொல்வோம்,

தெருக்களில் இறங்கி
நாங்கள் அல்லாதவர்களைப்
பார்த்து
கைகொட்டி நகைப்போம்

கலையில், இலக்கியத்தில்
அரசியலில் வாழ்க்கையில்
மாற்றம் புதுமையென்று
எங்கே செல்கிறார்.

பாவம் அவர்கள்
உண்மை அறியாதவர்கள்

எங்களில் யாரும் மாறவே வேண்டாம்
அதன் பின் தொழிலை
யாரிடம் நடத்துவது?

காசு பணம்தான் வேண்டும் நமக்கு!
விபச்சாரத்தை
உடலால் செய்தாலென்ன
கலையில் இலக்கியத்தில்
செய்தாலென்ன,

எங்கள் குலத்தொழிலை
எங்கும் செய்வோம்,
திரை கடல் ஓடியும் திரவியம் தேடிட
எங்கள் குலத்தொழிலை
எங்கும் செய்வோம்.

தேசங்கள் எல்லாம்
எம் பழம் பெருமையின்
மகத்துவம் பேசட்டும்,

வேட்டைகள் ஆடி
தீயினில் வாட்டி
நிணம் புசிக்கையில்
கூட்டமாய் நின்று
ஆடிப்பாடும் எங்கள் கரங்களை
தீயினில் வைத்து
'நாங்கள்' எல்லோரும்
ஒரு சத்தியம் செய்வோம்.
'நாங்கள் எப்போதும்
மாறவே மாட்டோம்' என்று.



www.tamilrangam.net

# ஈழத்தில் ட்ரொட்ஸ்கிய அபாயம்

சமுதாய புரட்சிக்கான, மருந்துபோல் புறப்பார்வைக்கு தோற்றமளித்துக்கொண்டு சமுதாயப்புரட்சியை சிதைத்து பலவீனப்படுத்தி பூர்ஸ்வா வர்க்கத்தையும் அதன் முதலாளித்துவசமூகங்களையும் மேலும் சில காலம் உயிர்வாழச்செய்ய இடமளிக்கின்ற ரொட்ஸ்கிய சித்தாந்தத்தைப்பற்றி, உலகத்தொழிலாளருடன் அவர்களுக்காகத்தான் இருக்கின்றேன் என பாசாங்கு செய்து கொண்டும், அதற்காக "சுடுகிறது மடியைப்பிடி " என வரலாற்றையே கேட்கின்ற அர்த்தமற்று அவசரப்படுத்துகின்ற இந்த ரொட்ஸ்கிய சித்தாந்தத்தைப்பற்றி, இடது அதிதீவிரவாத சொற்சிலம்பங்களால் மட்டுமே தொழிலாளர்களை மயக்குகின்ற இந்த மயக்க மாத்திரைபற்றி தோலுரித்து காட்டவேண்டிய கடமை லெனினிஸ்டுக்களின் தலையாயகடமையாக இருக்கின்றது.

இது காறும் பொதுப்பட ஈழதேசமக்கள் பலிக்கடாவானது போதாது என பிரத்தியேகமாக ஈழதேசத்தொழிலாளர்களை பலிக்கடாவாக்க துடிக்கின்ற ரொட்ஸ்கியத்தையும், அதன் உடன் இருந்தே கொல்லும் அபாயத்தைப்பற்றியும் தெளிவாக பார்ப்பதற்கு முன் சற்று ஈழத்தின் மீது பார்வையை செலுத்துவோம்.

ஈழதேசத்தின் தமிழ்பேசும் மக்கள் தாங்கொணாத துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து அதன் உச்சநிலையில் இருக்கின்றனர். ஈழமக்களுக்கு இனி சுதந்திரப்போராட்டமே சரிவராது என சாதாரண வாழ்வியல் சிந்தனையில் இருக்கும் மக்கள் என்றுவது தவிர்க்கமுடியாத ஒன்றுபோல் தோற்றமளிக்கின்றது. எத்தனையோ, எத்தனையோ சோகநாடகங்கள் எல்லாம் அங்கு மேடையேற்றப்பட்டன. ரணங்களும் அதிலிருந்து வடியும் இரத்தமும்-உயிர்பிரிந்து சிதைந்து நாய்கள் மேயும் உடல்களும் -அபாயக்குரல்களும், அலறல்ஓசைகளும் அந்த நாடகங்களில் காட்சி தந்தன. அவை இன்றும் தொடர்கின்றன.

www.tamilrangam.net

சுதந்திரமா? என்னறு? -அதன் விலை என்ன? முதலில் அது தமிழ்பேசும் மக்களைப்பொறுத்தவரை சாத்தியப்படுமா? என மக்களே கேட்கின்றனர். "போராட்டம்" என்ற போர்வையில் தனிநபர் தெருச்சண்டைகளும்(அன்று கத்தி-இன்று துப்பாக்கி) பதவிக்காகவும், தன்னுதிக்கத்திற்காகவும் நடந்த உட்சண்டைகளும் ஈழமக்கள் முகங்களில் சோகம்படர்ந்த ரேகையை படர விட்டிருக்கின்றன.

ஆம். எல்லாமே நடந்து முடிந்துகொண்டிருக்கின்றன. ஈழத்தில் சித்தாந்தங்கள் எல்லாம் சிதறின. தேசியம் அடியோடு உருக்கு லைக்கப்பட்டது. வர்க்கமும்-தேசியமும், வர்க்கப்புரட்சியாளர்களின் தலைமையில் சேர்ந்து நடக்கவேண்டிய கட்டாயத்தில் இருந்து விலகி ,வர்க்கமும்-தேசியமும் ஒன்றுடன்ஒன்று முட்டி மோதிக்கொண்டன. இதைச்செய்து முடித்தவர்களில் போலி இடதுசாரிகளும்-குருட்டுத்தனமான குட்டிமுதலாளித்துவ தேசியவாதிகளும் பிரதானமாக அடங்குவர்.

வரலாற்று அரங்கில் தேசியமும்-வர்க்கமும் ஒன்றிணைந்த புரட்சிகள் நடந்து, அதனூடு உழைக்கும் வர்க்கத்தின் தலைமையில் அமைந்த அரசுகள் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன. (இதில் ரொட்ஸ்கியவாதிகளின் பார்வை வேறு)
ஆனால், ஈழத்தின் நிலைமையை "பூர்சுவா-பாட்டாளி" வார்த்தைப்பிரதியீடுகளினுல் விளக்கிவிடமுடியாது. அதற்குப்பதிலாக ஈழத்தின் உற்பத்திசக்திகளின்(உற்பத்திகருவிகள்+மக்கள்)வளர்ச்சியையும், அதனூடு இருக்கின்ற சமுதாய உறவுகளையுமே நாம் எந்த சமூகப்பிரச்சனைகளையும் விளக்குவதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். (மார்க்சிய அணுகுமுறையும் இவ்வாறு தான்)

முதலில், ஈழத்தை அரசியல்ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் யாழ்குடாநாட்டுக்குள்ளேயே செறிந்து இருக்கின்றனர் .என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஈழத்தைப்பொறுத்த

www.tamilrangam.net

வரை கல்வியையே தங்களின் மூலதனமாகக்கொண்ட மக்களே ஈழத்தை தேசஅரங்கிலோ—சர்வதேச அரங்கிலோ அரசியல் ரீதியில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

இதற்கான அத்திவாரம் ஆங்கிலேயன் கல்விக்கென கண்டி,கொழும்பு,யாழ்ப்பாணம் ஆகிய மூன்று பிரதேசங்களையும் தெரிவு—செய்ததிலிருந்து ஆரம்பமாகியது. அன்றுமுதல் சுதேச உற்பத்தி—யை வளர்ப்பதற்கு பதிலாக—ஆங்கிலேயனின் சர்வதேச வர்த்தகத்தில் ஒரு அங்கமாக இலங்கை வர்த்தகத்தை இயங்க வைப்பதற்காகவே கல்விக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது.

இதை நான் சொல்லவருவதற்கு ஒரு தகுந்த காரணமுண்டு. ஈழத்தில் பூர்சுவாக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் "தேசிய பூர்சுவாக்கள்" என நூறுவீதம் அடித்துக்கூறிவிட முடியாது. இவர்கள் பொருளுற்பத்தியை பிரதிநிதித்துவப்படுத்துவார்கள் என. —

யார் கூறினாலும், இவர்கள் நூறுவீதம் தேசியத்தன்மை கொண்டவர்கள் அல்ல என்பது தான் உண்மை. அப்படி தனித்தமிழீழம் — ஒன்று கிடைப்பினும், இவர்கள் ஏகாதிபத்தியத்திடம் உடனடியாக சரணடைந்துவிடுவார்கள் என நான் அழுத்திக்கூறுவேன். எனவே ஒட்டுமொத்தத்தில் பார்த்தால் இவர்கள் தரகுமுதலாளிகளின் பிரதிநிதிகள் தான்.

ஆனால், மக்களின் தேசிய உணர்வினை தங்களுக்குச்சாதகமாகக் கொண்டிருந்தனர். ஈழத்தின் குட்டிமுதலாளிகள், நடுத்தரவர்க்க விவசாயக்குடும்பங்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் ஆகியோர் இவர்களின் பின் அணிதிரண்டு நின்றனர். (இவர்களை — நாங்கள் சிறுபூர்சுவாக்கள் அல்லது குட்டிபூர்சுவாக்கள் என சுருக்கமாக அழைப்போம்)

1977இல், இந்தப்பூர்சுவாக்களும், குட்டிபூர்சுவாக்களும் "தமிழீழம்" என்ற தேசியக்கோசத்தின் அடிப்படையில் தேர்—

www.tamilrangam.net

தலில் நின்றனர். இந்தப்பூர்சுவாக்களில் முதியத லேமுறையினரும், இளயத லேமுறையினரும் "தமிழீழம்" என்பதில் உயிர்மூச்சாக இருந்தனர்.

ஆனால், தேர்தலின் வெற்றியின் பிறகு; பூர்சுவாக்கள் எதிரியோடு நட்புப்பூண்டனர். ஐ. தே. க தரகுமுதலாளித்துவ அரசோடு தங்கள் கோசத்தை மறந்து, அவர்கள் பொதுவான அரசு திட்டத்திற்குள் இணைந்துகொண்டனர்.

குட்டிபூர்சுவாக்கூட்டம் தனித்தது, கொதித்தது. தேசியத்தை குருட்டுத்தனமான தீவிரதேசியவாதமாக்கியது. இந்தத்தேசியத் தன்மையை "குட்டிபூர்சுவா தேசியவாதம்" என்போம். குட்டிபூர்சுவா வர்க்கத்திற்குள் என்றும் ஒற்றுமை நிலேத்தது கிடையாது. ஆகவே அதன் வர்க்கப்பாஸியில் அவை பல இயக்கங்களாக உடைந்தன.

தனித்த குட்டிபூர்சுவாக்களாகவும்-குட்டிபூர்சுவாக்களும், இடதுசாரிகளும்-இடதுசாரிகளுக்குள்ளும்; அதிதீவிர இடதுசாரிகளும், போலிஇடதுசாரிகளும் உள்ளவர்களாகவும் இயக்கங்கள் பிரிந்து நின்றன.

ஆகவே, இதனடிப்படையில் அமைப்புகளுக்குள் நடந்த வர்க்கப் போராட்டங்களாலும், அல்லது சித்தாந்தப்போராட்டங்களாலும் அல்லது தனித்த குட்டிபூர்சுவாக்களுக்குள் நடந்த உட்சண்டைகளாலும் அல்லது இயக்கவாத சண்டைகளாலும்; ஈழப்போராட்டம் உடைந்து மூன்றாகியது.

பொதுஎதிரியோ-ஈழமக்களினை வேட்டையாடுவதினின்றும் ஒதுங்கவில்லே. இந்தப் பலவீனங்களையெல்லாம் தனது பலமாக எடுத்துக்கொண்ட அவன்-வடமராட்சியின் (லிபரேசன் - ஒப்பிரேசன்) மூலம் தான் சாமான்யமானவன் அல்ல என்பதை எடுத்துக்காட்டினன்.

முடிவு; மக்கள் "பிச்சை வேண்டாம் நாயைப்பிடி" என்ற நிலேமைக்குள் வந்தனர். இந்த மக்களின் விரக்தியை, தான் ஈழமக்க

www.tamilrangam.net

ளின் எதிரியல்ல எனக்காட்டிக்கொண்டு—அவர்களுக்கு உதவிசெய்வது போல்; தனது பூகோளநலனுக்காக இந்தியமுதலாளித்துவம் பயன்படுத்திக்கொண்டது.

ஈழப்பிரதேசத்தில் அமைதி தற்காலிகமாக சூடிகொண்டிருக்க வேண்டிய நியதியே— இந்தியாவினால் ஒரு விதியாகப்போய் விட்டது. இந்த அமைதிநிலைக்கு ஈழம் நெருங்கிக் கொண்டிருக்—கின்றது.

ஒரு மாகாணசுயாட்சியோ அல்லது பிறிதொரு வடிவத்திலோ ஈழமக்களுக்கு ஒரு தற்காலிகமான பூர்சுவா ஜனநாயகத்தீர்வு ஏற்படப்போகிறது. இதை இந்தியப்பூர்சுவா அரசுதான் தரகர் நிலையில் இருந்து செய்துவைக்கப்போகிறது.

இதன் மூலம் ஈழத்தில் இருக்கின்ற சிறுபூர்சுவாக்கள் பெரும்பூர்சுவாக்களாக வருவதற்குரிய நிர்வாகத்தை அதனுடன் கூடவே—பெரும்திரளான மத்தியதரவர்க்க விவசாயிகளுக்கான திருப்திகரமான சந்தையை, தரப்படுத்தல் அற்ற கல்வியை நிர்வகிப்பதற்குரிய அரசாகவே மாகாணஅரசு இருக்கும் என்பதே எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால், அமெரிக்காவினுடைய உலகவங்கியின் பிச்சைக்காரனாக இலங்கையிருப்பதால், தொடரும் நவகாலனித்துவச் சுரண்டல் முறையினால் நிதியானது பெரும்பகுதி மத்தியஅரசுடன் தான் இணைந்திருக்கும்.

இதனால், ஈழத்தில் பொருளுற்பத்திச்சக்திகளின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தடைக்கற்கள் இருந்த வண்ணமே இருக்கும். அத்துடன் தொடரும் குடியேற்றப்பிரச்சனைகளால் மாகாணசுயாட்சி என்பது ஈடாடிப்போகும். ஆகவே பூர்சுவா ஜனநாயக புரட்சிகளை நிறைவுசெய்து கொள்வதற்கு நிலவப்போகும்—மாகாணசுயாட்சி இடமளிக்கப்போவதில்லை.

-----முடிவு, ஈழமக்களின் சுயநிர்ணயத்திற்கான போராட்டம் சில ஆண்டுகளின் பின் தொடரும்.

www.tamilrangam.net

ஆகவே இனிவரப்போகின்ற போராட்டமானது நடந்து முடிகி-ன்ற போராட்டத்தின் படிப்பனவுகளையே தனது சாரமாகக் கொண்டிருக்கும். அந்த சாரம்தான் என்ன? சர்வதேசத்திலே யே அதற்கான உதாரணங்கள் நிறைந்து கிடக்கின்றன. இதுவரை யில் "தேசிய விடுதலை" என்ற பொதுத்தளத்திலேயே நாம் நின்றோம். அந்தத்தளத்தில் நின்று கொண்டுதான் வர்க்கங்கள் – அற்ற ஈழத்தைப்பற்றி நினைத்துப்பார்த்தோம்.

ஆனால், இனி தேசிய வெறியர்களும்–இயக்கவெறியர்களும் அகன்று போம், ஒரு வர்க்கத்தளத்தில் நின்றுகொண்டுதான் தெளிந்த – தேசியவிடுதலைப்போராட்டம் முன்னெடுக்கப்படும். அதாவது, ஒரு நகர்புற–கிராமப்புற பாட்டாளிகளையே தனது தலைமை சக்தியாகக் கொண்ட ஒரு கட்சியே தேசியவிடுதலைப்போரா ட்டத்தை முன்னெடுக்கும்.

தோழர் லெனினின் "தேசியவிடுதலையை நோக்கிச்செல்லும் – மக்கள், ஒரு கட்டத்தில் வர்க்க விடுதலையை நோக்கித்திரும்பு வார்கள்" எனும் எதிர்வு கூறலும் இதை மெய்ப்பித்துக்காட்டு-கிறது.

ஆகவே, ஈழப்போராட்டத்திற்கு இனிவரும் காலத்தில் வர்க்க வேலைத்திட்டமே அடிப்படையாக அமைகிறது. இந்த வர்க்க – வேலைத்திட்டத்தை எந்த சமூகவிஞ்ஞான சித்தாந்தத்தின் அடிப் படையில் முன்னெடுப்பது? சந்தேகத்திற்கு இடமேயின்றி மார்க் ஸீய–லெனினிய சித்தாந்தம் தான் என பதில் கிடைக்கிறது.

இப்பொழுது நாங்கள் எடுத்துக்கொண்ட பிரச்சனைக்கு வரு வோம். ஈழத்தில் வர்க்கப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு மார்க்ஸீய–லெனினிசம் போல ஒரு தத்துவம் உண்டாம். அது – தான் ரொட்ஸ்சிய தத்துவமாம். நோய்வாய்ப்பட்டிருக்கின்ற உலகம்; சமநிலையைப் பெறுவதற்கு, குணமடைவதற்கு ரொட்ஸ் சிய சித்தாந்தம் தான்சரியான தத்துவமாம்.

www.tamilrangam.net

எனவே, உலகப்புரட்சியின் அங்கமான ஈழப்புரட்சியில் சித்தாந்தப்பிளவுகளையும், போராட்டப்பின்னடைவுகளையும் ஏற்படுத்துவதற்கு ரொட்ஸ்கியம் எனும் தத்துவம் முயன்று கொண்டு இருக்கின்றது. அதன் மூலம் தன்னையறியாமலேயே சுரண்டல்அமைப்புக்கு உதவிசெய்கிறது.

நான் மேலே குறிப்பிட்டதுபோல் மார்க்ஸிய-லெனினியப்பார்வைதான் ரொட்ஸ்கியவாதிகளின் பார்வையல்ல.

ஒரு தேசத்தில் வர்க்கநிலைமைகள், அரசியல்-சமூக-பொருளாதர நிலைமைகள் எப்படியிருப்பினும் தங்களுடைய ரொட்ஸ்கியின் நிரந்தர புரட்சிக்கொள்கைக்காக "எரிகின்ற வீட்டில் விறகு பொறுக்குவதுதான்" ரொட்ஸ்கியத்தின் பெரும்பணியாக இருக்கின்றது. இதற்கு அவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் ஊடுருவல் - வாதம்(ENTRISM) என்பதாகும். பிரஞ்சு மொழியின் அகராதியில் ஊடுருவல் வாதம் என்ற சொல்லை சேர்த்தவர்கள் ரொட்ஸ்கியவாதிகள் என்பதை அறிந்து கொள்வோம். ஊடுருவல்வாதக்கொள்கை மூலம் லெனினிச வழிசெல்லும் கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் பொதுஸ்தாபனங்களுக்குள் ஊடுருவி அவற்றை சிதைத்து அதில் ஒரு பகுதியை ரொட்ஸ்கியத்தின் பக்கம் இழுத்துக்கொள்வதிலேயே இந்த ஊடுருவல்வாதக்கொள்கை செயற்படுகின்றது. (இதைப்பற்றி பின்னர் விரிவாக ஆராய்வோம்)

பொதுவாக ரொட்ஸ்கியவாதிகள், ரொட்ஸ்கிசம் தான் மார்க்சியத்தின் சரியான கிளையென சொல்லிக்கொள்கின்றனர். பல வேளைகளில் லெனினிசமும் ரொட்ஸ்கியமும் ஒன்றே என விளம்பரம் செய்கின்றனர். லெனினுடைய படத்தையும், ரொட்ஸ்கியினுடைய படத்தையும் ஒன்றாக பிரசுரிக்கின்றனர். லெனின் ரொட்ஸ்கியினுடைய சித்தாந்த எதிரியல்ல என்றும் காட்டிக்கொள்கின்றனர். லெனினும், ரொட்ஸ்கியும் முரண்பட்டதை மறைத்து விடுகின்றார்கள். "பொருளற்ற வெற்று கத்தல்கள்" என்றும், "பெரும் பேச்சின் உதாரணம்"என்றும் லெனின் ரொட்ஸ்கிய -

www.tamilrangam.net


-த்தை கிடடலாக வர்ணித்ததை மறந்து விடுகின்றீர்கள்.
உலகதொழிலாள வர்க்கம் இதுகாறும் பெற்ற வெற்றியின் தொடர்ச்சியை ஈழத்திலும் தொழிலாள வர்க்கம் பெற தடையாக இருக்கப்போகின்ற ரொட்ஸ்கிய சித்தாந்தமானது உலகத்தொழிலாள வர்க்கத்தின் ஆசான், சர்வதேச சகோதர தத்துவாசிரியர் லெனின் உருவாக்கித் தந்த மார்க்ஸீயத்தின் தொடர்ச்சியான லெனினிச சித்தாந்தத்திற்கு எதிரானது எனவும் மார்க்ஸீயசித்தாந்தத்தின் அடிப்படைகளுடனேயே ரொட்ஸ்கியம் முரண்படுகின்றது என்பதையும் நாம் ஆராய்வோம்.
நாம் இன்னும் ஒன்றை மனம்திறந்து பார்க்க வேண்டும். அதாவது, ரொட்ஸ்கியமும் தொழிலாளருக்காகவே உருவாக்கப்பட்டதென்பதை நாம் மறுக்கவில்லை. மார்க்ஸீயத்திற்கு முன்னும், அதன் சமகாலத்திலும் தொழிலாள வர்க்கத்தின் விடிவுக்காக பல தத்துவங்கள் இருந்தன. உதாரணமாக, இங்கிலாந்தில் ரொபேட் ஓவனின் (இவர் உண்மையான மனிதநேயமுள்ளவர்) விஞ்ஞான மற்ற கம்யூனிஸ்ட் திட்டங்களை குறிப்பிடலாம். ஆனல், அவை அனைத்தும் வரலாற்றின் புறநிலை வளர்ச்சியை (இதையும் பின்னர் விரிவாகப் பார்போம்) விலக்கிய காரணத்தால் அல்லது திரிவு படுத்திய தன்மையினுல் சுவடற்று மறைந்து போயின. இந்த அடிப்படையிலேயே ரொட்ஸ்கியத்திற்காக லெனினிஸ்டுக்கள் இரக்கப்படமுடியும்.
ஆகவே, இயற்கையின் விதிகளுடனேயே மனிதன் எதிரிடுகின்றபோது பிறக்கின்ற சமூகவிதிகளை பிசகற்று கண்டு கொண்டதனுலேயே - மார்க்ஸீய-லெனினிசம் மனிதகுலத்தின் நீண்ட நெடுங்கால சித்தாந்தமாகியது.
எனவே இயற்கை-சமூகம்-சிந்தனை பற்றிய இயக்கவியல் வரலாற்று பொருள்முதல்வாத விதிகளுடன் முரண்படுகின்ற எந்த சித்தாந்தத்தையும் மார்க்ஸீய லெனினிசத்தின் ஆதரவாளர்கள் பிடிவாதமாக எதிர்க்கின்றனர். இதற்கு மார்க்ஸும் சரி, எங்கெல்ஸும்.

www.tamilrangam.net

சரி, லெனினும் சரி விதிவிலக்காக இருந்தது கிடையாது. ரொட்ஸ்கியின், ரொட்ஸ்கிய சித்தாந்தத்திற்கும் இயக்கவியல்வரலாற்று பொருள்முதல் வாதத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென்பதை நாம் சொல்லித் தீரவேண்டும். இதனால் தான் லெனின் ரொட்ஸ்கியத்தை அகநிலைவாதத்திற்குள் விழும் அபாயம் என்று எச்சரித்தார்..

ஆகவே, ரொட்ஸ்கியத்தின் சாரம்சம் பற்றியும், அவைகள் புரட்சியின் சமூக இயல்போடும், லெனினிசத்தின் வர்க்க அடிப்படைகளுடனும் எவ்வாறு முரண்படுகின்றது என்பது பற்றியும், அதன் - போராட்ட அணுகுமுறைகள்-யுத்த தந்திரோபாயங்கள் எவ்வாறு லெனினிச அணுகுமுறைகளுடனும், தந்திரோபாயங்களுடனும் முரண்படுகின்றது என்பது பற்றியும், அதனால் விளையும் வரலாற்றுப்பின்னடைவுகளையும் அடுத்த இதழ்களில் தொடர்ந்து பார்ப்போம்.

எஸ் - இளங்கோவன்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# வியாக்கியானம்

## "உப்பிட்டவரை உள்ளளவும் நினை"

பக்கம் (1) நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தில் கொத்தடிமைகளாக வேலை செய்த தொழிலாளர்கள் நோயுற்றிருக்கும் பொழுது நிலப்பிரபு, அவர்கள் குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள் கொடுத்தனுப்புவது வழக்கம்.

காரணம் (1) உழைத்த கூலி அன்றைக்கே போதாதபோது — வேலைக்கு செல்லவில்லையேல் குடும்பங்கள் உணவின்றி இறக்க நேரிடும். அதனால் மீண்டும் வேலைக்கு உழைப்பாளர்கள் தேவை.

அதாவது; சிலேப்பனம் இழுக்கும்போது தண்ணீர் பருக்குவதுபோல,

காரணம் (2) கட்டாயம் கொடுக்க வேண்டிய நிலையை நிலப்பிரபு உணர்ந்து கொண்டு அதை அன்பளிப்பு ஆதரவு எனக்கொடுத்து நல்லபிப்பிராயத்தை உருவாக்குதல். தனது முரண்பாடுகளை தற்காலிகமாகவேனும் தணித்துக் கொள்வதோடு எப்போதும் தன்னில் தங்கியிருக்குமாறு செய்தல்.

பக்கம் (11) உணவின்றி உடையின்றி அடுத்தவேளைக்கு என்னசெய்வதென ஏங்கி இருக்கும் பொழுது கடனாகவோ கடனின்றியோ ஒருவர் ஆதரவு நல்கும்போது — அவரை மறக்காமலிருப்பது.

பார்வை; எவரும் எவருக்கும் உப்பிடவோ, உணவிடவோ, உடையிடவோ அவசியமில்லாத சமூகத்தை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ எவ்ரிலும் எவரும் தங்கியிராத சமூகஅமைப்பை நிர்மாணிப்பதே, அதற்காக போராடுவதே, இதற்கான தீர்வு.

—சுகன்—

www.tamilrangam.net

# மொழி, உருவம், உள்ளீடு

ஐரோப்பிய நாடுகளில் தமிழ் இலக்கியம் படைக்கத்துடிப்பவர்களிடையே நிலவும் "விமர்சன வறுமை" பலவித கோணங்களில் நிராயிக்கப்படத்தக்கது. குறிப்பாக, இலக்கியத்தின் அடிப்படைச்சிந்தனைகளை படைப்பாளிகளின் முன்னே கொண்டுசெல்வதற்குத் தடையாகவுள்ளது இந்த "விமர்சன வறுமை". எனவே ஐரோப்பிய தமிழ் இலக்கியம் என்று பேசும்போது ஒரு "நிறைவு" ஏற்பட மறுக்கின்றது.

"விமர்சன வறுமை"யை ஒரு விவாதப்புள்ளியாக எடுப்பதல்ல இந்தக்கட்டுரையின் நோக்கம். மொழி, உருவம், உள்ளீடு இவைகளுடன் சம்மந்தப்பட்டது "விமர்சன வறுமை", மொழி, உருவம், உள்ளீடு பற்றிய விவாதம் அல்லது ஆய்வு ஒரு கட்டுரையில் சாத்தியமாகக்கூடியதல்ல. எனவே இந்தக்கட்டுரை, படைப்பிலக்கியம் படைக்கத்துடிப்பவர்களுக்கு சில அடிப்படைத்தேவைகளை மட்டும் காட்டி நிற்கும்.

ஐரோப்பாவிலே தமிழ் இலக்கியம் படைக்கப்படவேயில்லை என்ற கூற்று அபத்தமானது. ஆனால் பெரும்பான்மையான "படைப்புக்கள்" தங்களை இலக்கியம் என்று இனம்காட்டும் தகுதியை இழந்து நிற்கின்றன, படைப்பாளிகள் அனுபவங்களிற்கும், அறிவியலுக்கும் அந்நியமாகி நிற்பதும், அவர்களிடம் படைப்பு பற்றிய பிரக்ஞை மழுங்கியிருப்பதும் இந்தக்குறைபாட்டிற்கான அடிப்படைக்காரணமாகவுள்ளது. படைப்பிலக்கியம் பிரக்ஞையை வெறுத்தொதுக்கும் ஒரு துறையல்ல.

<u>மொழி:</u>

எது எமது மொழி? என்ற கேள்வியைக் கேட்க வேண்டிய தேவை இன்று ஐரோப்பிய தமிழ் இலக்கியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

படைப்பாளிகட்கு உண்டு. இவர்கள் கையாளும் மொழி இலக்கிய தராதரத்தை விட்டு விலகிநிற்கின்றது. அத்தோடு இவர்களால் - தொடப்படும் இலக்கியப்பிரிவுகளில், மொழி தன்முகத்தைக்காட்ட மறுக்கின்றது. மொழி மீதான விவாதம் "மொழியறிவுடன்" சம்பந்தப்பட்ட ஒன்றல்ல. படைப்பவன் தனது மொழியைப்படைக்கும் அல்லது தெரிவு செய்யும் சுதந்திரத்தைக் கொண்டுள்ளவன். மொழியின்மீது ஏற்படுத்திக்கொள்ளும் பயிற்சியே படைப்பவனுக்கு அவனது மொழி எது என்பதைக்காட்டக்கூடியது. எனவே ஐரோப்பிய தமிழ்ப் - படைப்பாளிகள், தாம் இதுவரை உபயோகித்துக்கொண்டிருக்கும் மொழியின்மீது மீள்பார்வை ஒன்றைச்செலுத்துவதும், அல்லது தனது மொழியை பயிற்சி என்னும் ஊடகத்தின் மூலமாகப் புனரமைப்புச் செய்து கொள்ளவேண்டியதும் அவசியம்.

## உருவம்:

படைப்பிலக்கியம் பலவிதமான வடிவங்களைக் கொண்டது. அதாவது: உருவகங்கள், சிறுகதை, கவிதை, நாவல் என இவை பலதரப்படும். ஏற்கனவே பயிற்சிக்குக்கொண்டுவரப்பட்ட இந்த உருவங்களைச் "சிதைப்பது" படைப்பாளிகளின் நோக்கமாக இருக்கக் கூடாது. ஐரோப்பிய தமிழ் இலக்கியத்தில் இந்த இலக்கிய வடிவங்களை இனங்காணுவது மிகவும் சிரமத்திற்குரிய தொன்றாகும். விமர்சனப்பார்வையுடன் முரண்பட்டு நிற்கும் வாசிப்புப் பாரம்பரியம் இதற்கான காரணங்களில் ஒன்று. எது கவிதை, எது சிறுகதை என்று தெரியாமல் படைப்பாளிகள் சில முடிவுக்கு வருவது தர்க்க ரீதியானதொன்றல்ல. படைப்பாளிகள் வெறுமனே உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல், அறிவு ரீதியாக இலக்கியத்தை அணுகுவதன் மூலம் உருவம் தொடர்பான தமது மாயைகளைப் போக்கிக்கொள்ள வாய்ப்புண்டு. இதனைசுயமாக அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொள்ளும் தேடல்கள் என்றும் சொல்லலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

உள்ளீடு:

மொழியும் உருவமும் இருந்துவிட்டால் ஒரு "படைப்பு" பிறந்து விடாது. உள்ளீடு, இது படைப்புக்கு கனதியைச் சேர்ப்பது மட்டுமல்ல, படைப்பின் உயிர்நாடி என்றும்கூடச்சொல்லலாம். படைப்பாளிக்கும் வாசகனுக்குமிடையே ஒரு உறவினை ஏற்படுத்துவது உள்ளீடு. வாசகன் தேடும் "செய்தி" அங்குதான் வாழ்ந்து கொண்டிருக்கும். உள்ளீட்டிலே அலசப்போகும் விசயத்தை தெரிவு செய்யும் பொறுப்பு படைப்பாளியின் சுதர்மத்துடன் சம்பந்தப் பட்டது.

படைப்பாளி தன் வாசகனுக்குச் சொல்ல விரும்பும் "கரு" மொழியாலும், உருவந்தாலும் செப்பனிடப்படுகின்றது. ஆனால் ஐரோப்பிய தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் மொழி, உருவம், உள்ளீடு இவைகள் மீது எந்தவிதமான பிரக்ஞையும் கொள்ளாமல் "இலக்கியம் "படைக்கும் ஒரு வித்தியாசமான போக்கை இங்கு காணமுடிகின்றது.

விமர்சன வறுமை:

இங்கே "விமர்சன வறுமை" தன் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றன. இலக்கிய விமர்சனங்கள் உதிரிகளாகி - ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்பது ஒரு உண்மை. ஆனால் படைப் பாளிகளுக்கும் விமர்சனங்களுக்கும் இடையே ஒரு பாரிய இடை வெளி காணப்படுகின்றது. இந்த இடைவெளி படைப்பாளிகளுக்கு ஊக்கம்தரும் ஒன்றல்ல. சரியான படைப்பிலக்கியங்கள் தோன்று வதற்கு "விமர்சனம்" என்னும் நீர் தேவை. சரியான இலக்கியத் திட்டமிடல் மேற்கொள்ளப்படாது விட்டால் படைப்போ, விமர் சனமோ சாத்தியமாகாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net


"ஐரோப்பிய தமிழ் இலக்கியம்" என்ற ஒரு பரிமாணம் இன்றுவரை ஒரு கனவாகத்தான் தன்னை இனங்காட்டிக்கொண்டிருக்கின்றது. இது கனவல்ல. நிஜம் என்பதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு, படைக்கத்துடிக்கிறவர்களின் கடுமையான உழைப்பிலேயே தங்கியுள்ளது.

ஜெ - சுகிர்தன்

# ஒரு மனிதனாக இருப்பாய்

எல்லோரும் உன்னைச் சந்தேகிக்கும் போது
உன்னிடம் நீயே நம்பிக்கை கொள்ளமுடியுமானால்
பிறரால் வெறுக்கப்பட்டாலும்
வெறுப்புக்கு உன்மனதில் இடங்கொடாதிருந்தால்
வெற்றி தோல்விகளை அனுபவித்து
அந்த இரண்டையும் ஒன்றைப்போலவே கருதமுடியுமானால்
யாருடன் சேர்ந்து பேசினாலும்
பண்புகளை கட்டிக்காக்க முடிந்தால்
அரசர்களுடன் பழகினாலும்
பெரியவர்களின் தொடர்பு விட்டுவிடாமலிருந்தால்
ஒவ்வொரு விநாடியும்
பயனுள்ள வாழ்வு நடத்த முடியுமானால்
இந்த உலகமே உன்னுடையது.
இதற்கும் மேலாக, என் மகனே;
நீ ஒரு மனிதனாக இருப்பாய்!

கிப்ளிங்



www.tamilrangam.net



சிறுகதை

அர்ச்சுனி

வழமைபோல கனகன் வேலையை முடித்துக் கொண்டு மாலை ஏழு மணிக்கு தனது வீட்டுக்கதவைத் திறக்கின்றான். உள்ளே சென்றதும் அவனுக்கு வியப்பாக இருந்தது. வழக்கமாக ஒருபுறம் காதைத்துளைக்கும் ஒலி -யுடன் சினிமாப்பாடலும், மறுபுறம் யாரும் பார்ப்பாரற்ற நிலையில் டெலிவிசனும் ஓடிக் கொண்டிருக்கும். எப்படியும் மூவருக்குக் குறையாமல் ஒலி பெருக்கி போல சத்தம்போட்டுக்கதைத்துக் கொண்டிருப்பார்கள்! ஆனால், இன்று வழக்கத்திற்கு மாறாக பூரண அமைதி

ஒருநிமிடம் வியப்புக்குள் ஆழ்ந்துவிட்டு "ஆனந்தி" என்று குரல் கொடுத்தான். ஆனந்தி கனகனின் மனைவி, இரண்டு வயதில் ஒரு -மகன், தம்பியார் பாலன், பாலனின் நண்பனுமாக மொத்தம்ஐந்து பேர் கொண்ட குடும்பம் இரண்டு அறைகள்மட்டும் கொண்ட இந்தவீட்டில் வசிப்பவர்களாகும். முதல்முறை கூப்பிட்ட குரலுக்கு எந்தவித பதிலும் வரவில்லை. இரண்டாம் முறை ஆனந்தி என அழைத்துக் கொண்டு தமது அறைக்கதவைத் திறக்கின்றான். ஆனந்தி கட்டிலின் ஒரு மூலையில் இருந்து கொண்டு மகனின் சேட் பொத்தானைத் தைத்துக் கொண்டிருந்தாள். "ஆனந்தி எங்கையப்பா விதுரன்" ஆனந்தி மறுபக்கமே பார்த்துக் கொண்டிருந்தபடி பாலன் கொண்டு போயிட்டான், என முடித்துக் கொண்டாள். "குழந்தையை எந்த நேரத்தில வெளியில கொண்டு போறதெண்டில்லையா? " வெளியில சரியான குளிரில்ல ? அவளது பதிலை எதிர்பாராதவனும்---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

"துவாய் எங்க? "

பாத்ரூமுக்குள்ள தான் ஆனந்தியின் பதில்! வேலை அலுப்புத்தீர நல்ல சுடுதண்ணியில் குளிக்கலாமென்ற சந்தோசத்தில் கனகன் தண்ணியைத் திறந்தான். ஒரே பச்சத்தண்ணிராகவே வந்தது. பாத்ரூமுக்குள் நின்றபடியே "ஆனந்தி சுடுதண்ணி வரயில்ல என்ன நடந்தது? "

'இன்டைக்கு காலையில் இருந்து சுடுதண்ணி வரயில்ல' அறைக்குள் இருந்தபடி ஆனந்தியின் பதில் வந்தது. கனகனுக்கு இப்படியான விசயங்களுக் கெல்லாம் கோபம் வருவதில்லை, இவைகளை எல்லாம் சகித்து வாழப்பழகி விட்டான். லேசாக உடம்பைக்கழுவி விட்டு வெளியே வந்தான். மேசையில் தேநீர் அவனுக்காகக் காத்திருந்தது. அருகில் இருந்த நாற்காலியில் இருந்து கொண்டு தேநீரைப் பருகிக் கொண்டே, இன்டைக்கு வெளியில வராமல் இருக்கிற எதாவது சுகமில்லையோவென எண்ணியவாறு அடுத்த அறைக்குள் சென்று "என்ன ஆனந்தி சுகமில்லையா? " முதல் இருந்த இடத்திலேயே இருந்தபடி மறுபக்கமாக பார்த்தவண்ணம் 'எனக்கென்ன நான் நல்லாத்தானே இருக்கிறன்' இப்பதில் வந்த தொனியும் குரலின் கரகரப்பும் ஆனந்தியின் மனதில்ஏதோ பிரச்சனை இருப்பதை உணர்த்தின. ஊரில இருந்து கடிதம் ஏதேன் வந்ததோ! இல்லை என்ன பிரச்சனையாம் இருந்தாலும் படுக்கையின் போது வெளிவரும் தானே; என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு டெலிவிசனை முடுக்கிவிட்டு தற்செயலாக மேசையைப் பார்த்தான். திருமண அழைப்புமடல் ஒன்று கிடந்தது. விரித்துப்பார்த்த பொழுது; நண்பன் கணேசுவின் திருமணம், அதுவும் வருகிற ஞாயிற்றுக்கிழமை மாதம் முடிவு வங்கியிலும் பணம் முடிந்துவிட்டது. எப்படியும் குறைந்தது ஐநூறு பிராங்காவது வேணுமே, போகாமலும் இருக்க முடியாது அடிக்கடி சந்திக்கும் நண்பன்.

கனகனுக்கு தலையே சுற்றியது! ரூமில் சுடுதண்ணீர் இல்லை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வங்கியில் பணமும் இல்லை, மனைவியின் முகமும் சரியில்லை. டெலிவி சனையும் பொறுமையாகப் பார்க்க முடியாது சனல்களை மாற் றிமாற்றிக் கொண்டிருந்தான்... மனம் குழம்பியிருந்தது. இக்குழப் பத்தைத் தீர்வுக்குக் கொண்டுவர எந்த அணுகுமுறையும் அவன் சிந்தனைக்கு வரவில்லை. கதிரையில் இருந்தபடியே கால்களை - நீட்டிக் கொண்டு தலையை சுவரில் சாய்த்து, கண்களை மூடியவண் ணம் மனசுக்குள் புலம்பிக் கொண்டிருந்தான். "நீங்கள் சாப்பிடே ல்லையா? " ஆனந்தி அப்பொழுதுதான் அறையை விட்டு வெளி யில் வந்து கனகனின் அருகில் நின்று கேட்கிறாள். குழப்பத்தில் இரு ந்து தன்னை பாதி நிறுத்திக் கொண்டு எனக்குப் பசிக்கயில்லை, பேந்துசாப்பிடுவம். என்றவன் தொடர்ந்து; அது சரி, ஏன் முகத் தை உம்மெண்டு வெச்சுக் கொண்டிருக்கிற-என்ன பிரச்சனை ? ஒரு பிரச்சனையும் இல்லை, நான் உங்கட சிநேகிதனின்ட கலியா ண வீட்ட வரயில்லை.

ஆனந்தி நறுக்கென்று சொன்னாள். அப்பொழுது தான் கனகனுக்கு விடயம் ஒடி வெளித்தது. கடந்த மாதம் நண்பன் ஒருவனின் மக- னின் பிறந்தநாளுக்கு சென்றுவந்த பின் ஆனந்தி வெளிப்படுத்திய பிரச்சனை ஞாபகத்திற்கு வந்தது. தனக்கு பவுண் அட்டியல் இல்- லாத குறையும், இதனால் தான் இனிமேல் எந்த வைபவத்திற்கும் வரமாட்டன் என்று சொன்னதும் நினைவுக்கு வந்தது.

"உனக்கு பவுண் அட்டியல் இல்லையெண்டுதானே வரமாட்டன் என்டுற"

அவள் மௌனமாக நின்றாள்.

கனகன் தொடர்ந்தான். ஒரு மனிசர் முக்கியமா அல்லது அட்டி யல் முக்கியமா?

"அவள் ராசாத்தி வருவாள், ஊரில இருக்கிற "நகை "முழுக்கப்போ ட்டுக் கொண்டு" நான் இப்படியே வந்தா...... சீ... சீ... நான் வரயில்லை.

"உனக்கென்ன அட்டியல்தானே வேணும், இந்தியன் கடையில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

கிலிற் அட்டியல் வாடைக்கெடுக்கலாம் எடுத்துத்தாறன்" உங்களுக்கு, பவுணுக்கும்-கிலிற்றுக்கும் வித்தியாசம் தெரியாட்டி மற்றவைக்கும் தெரியாதா? அதுவும் வீடியோவும் பிடிக்கினம், வீடியோக்கொப்பி ஊருக்குப் போனால் எங்கட வீட்டுக்காரரும் சிலவேளை பாப்பினம் தானே!

அவள் கலியாணவீட்டில காதுத்தோட்டத்தவிர வேற பவுணைக் கண்டிருக்கமாட்டள். இஞ்ச வந்து இருபத்தி ஐஞ்சு பவுணிலகொடி செய்து போட்டிருக்கிறள், பத்து பவுணில அட்டியல், காப்புகள் என்றால் கணக்கில்ல; இதுகளையெல்லாம் போட்டு ஆட்டிக்கொண்டு நிப்பாளவயள்! நான் அஞ்சு பவுண் தாலிக்கொடியோட போனால் என்னை யாரு மதிப்பினம்?

கனகனுக்கு தலையே ஒருமுறை கிறுகிறுத்தது ." ஊரில சனங்கள் ஒருவேளை சோத்துக்கூட நிம்மதியா தின்னவழியில்ல. இன்னும்பல சனங்களுக்கு சோத்துக்கே வழியில்ல" இஞ்ச இருக்கிற எங்களுக்கு இப்படியான விஷயம் தான் பெரிய பிரச்சனை ! மக்களைப்பற்றிச் சிந்திக்கின்ற, நேசிக்கின்ற ஒரு மனிதனைப்போல சொல்லி முடித்தான் கனகன். தன் மனைவியைப்போன்றவரின் எண்ணங்களை வெறுப்பவன். ஆயினும், இந்த சமூகத்தில்புரையோடிப்போயிருக்கும் போலித்தனமான எண்ணப்பாடுகளை முறியடிக்கும் மனோ தைரியம் அவனுக்கு வரவில்லை, இப்படிவாழ்வது தான் வாழ்க்கையாக்கும் என்ற சலிப்போடு வாழ்பவன்.

"அதுக்குத்தான் நான் வரயில்லையெண்டு சொன்னனான், எங்கட நிலைமை எனக்குத் தெரியும் தானே! " ஆனந்தி தொடர்ந்தாள்; எனக்கு இப்படிக்கனக்க நகை போட வேணுமெண்ட கெடுவில்ல . ஆனால், மற்றவைய விட நாங்கள் குறைஞ்சாக்கள் இல்லையெண்டு காட்டத்தானே வேணும், அதோட சொத்தும் சேர்க்கிறதாப் போச்சு பிள்ளையளுக்கு உதவும் தானே! நல்ல போட்டி; நாங்கள் குறைஞ்ச ஆக்கள் இல்லையெண்டு காட்ட வேறு விசயங்களே இந்த உலகத்தில இல்லையாக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

நாங்கள் எங்கட சந்ததிக்கு எவ்வளவு துரோகம் செய்யிறம். நாங்கள் இப்படி சொத்துச் சேர்த்தபடியால் தானே நாடு-நாடா அகதிகளா அலையிறம். சொத்து இல்லாட்டில் சாவோ, வாழ்வோ ஊரில இருந்து உரிமைக்காகப் போராடியிருப்பம் என்று முடித்துக்கொண்டு ஒரு பெருமூச்சை விட்டான்.

சிறிது நிமிட அமைதிக்குப் பின்னர் தன் மனைவியைப்போன்ற மனநோய் உள்ளவர்க்கு என்ன மருந்து கொடுப்பது என்று தன்னுக்குள் எண்ணி நொந்துகொண்டான்.

அவனுக்கு ஒரு பாதையும் தெரியவில்லை. சிறிது நிமிடங்கள்தலையைக் குனிந்தபடி இருந்த கனகன் நிமிர்ந்து தன்மனைவியின் முகத்தைப் பார்த்துவிட்டு எந்த நேரமும் பணம் மாறக்கூடிய நண்பனின் தொலைபேசி இலக்கத்தை எடுத்து சட்டைப்பைக்குள் - வைத்துக் கொண்டு வீட்டைவிட்டு இறங்கி கீழே மாடிப்படிகளில் நடக்கத் தொடங்கினன்.



ஒருவர்- எங்கட் தமிழ்ச்சனம் ஏன் இவ்வளவு தொகையா நெருக்குப்படுகினம் ஈழப்போராட்ட ஊர்வலம் ஏதேனும் நடத்துகினமோ!

மற்றவர்-இல்லை தமிழ்நாட்டு முன்னணி நடிகையொருத்தி வாறுவாம்.

www.tamilrangam.net

OPAL

மக்கள் கலை இலக்கிய அமைப்பை
வளர்த்தெடுக்க;
முற்போக்கு சக்திகளே
வருக!

வெளியீடு: மக்கள் கலை இலக்கிய அமைப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்